# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்


வெள்ளி, ஜுன் 14 2019. இதழ் - 66






**'அரபு மயப்படுத்தல்'**
இலங்கை முஸ்லிம்கள் தமது கலாசாரத்தை அரபு மயப்படுத்துவதை...
பக்கம் - 03


**கிழக்கின் சனநாயக இயங்கு தளத்தில் ஊடகங்களின் வகிபாகம்**
பக்கம் - 04


**"சேட்டைக் கழட்டுங்க முதல்!" அறியாமையின் ஆணவக்குரல் 2**
கோவில்களில் ஆண்கள் மேலாடையைக் கழற்றுவதில்...
பக்கம் -11


**கணபதிபுரம் மாதிரிக்கிராமமும், கச்சக்கொடிசு வாமிமலை மக்களும்!**
பக்கம் - 07



## மைத்திரி- ரணில் முரண்பாடு உக்கிரமடைகின்றது

நி. அமிர்தஸன் ---

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான முரண்பாடுகள் உக்கிரமடைந்துள்ளதாக அமைச்சரவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளை நிறுத்த வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக்கொண்ட போதும், தொடர்ச்சியாக அந்த அமர்வு நடைபெறுகின்றது. அத்துடன் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தவிடாமல் மைத்திரிபால சிறிசேன தடுத்ததால், ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அமைச்சர்களுடன் பேசித் தீர்மானித்து வருகின்றார்.

இதனால் இருவருக்குமிடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் விடயத்திலும் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன. ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த வேறொருவரை வேட்பாளராகக் களமிறக்குவதில் மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கின்றார்.

ஐக்கியதேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களோடும் கட்சியோடு நெருக்கமான பிரமுகர்களோடும் மைத்திரிபால சிறிசேன கலந்துiயாடிவருகின்றார். இதனால் ஆத்திரமடைந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேனவுடன் ஜனாதிபதித் தேர்தல் குறித்து உரையாட வேண்டமெனவும் கட்சி உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

மகிந்த ராஸபக்ஷவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கப்போதில்லையென்றும் தேர்தலில் தானும் போட்டியிடவில்லையெனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இந்த நிலையில் அவர் தலைமையிலான

தொடர்ச்சி... (பக்கம் -02)

## தேசிய புலனாய்வுக்கு புதிய தலைவர்



தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சிசிர மெண்டிஸ் அண்மையில் இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழகத்தில் தடம் பதித்துவிட்டதா ஐ.எஸ் அமைப்பு?

இந்திய தேசிய புலனாய்வுத் துறையினர் கடந்த புதன்கிழமை கோவையில் ஏழு இடங்களில் சோதனை நடத்திய நிலையில், வியாழனன்று தமிழ் நாடு மாநில உளவுத்துறையினரும் கோவை மாவட்ட சிறப்பு உளவுப் பிரிவினரும் கோவை உக்கடம் அருகில் மூன்று இடங்களில் சோதனை நடத்தினர்.

கடந்த ஏப்ரல் 22ஆம் தேதி, ஈஸ்டர் பண்டிகையின்போது, இலங்கையில் நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பில் முக்கிய சூத்திரதாரியாக கருதப்பட்டவர் சஹ்ரான் ஹாஷிம். தற்போது கோவையில் நடைபெற்று வரும் சோதனைக்கும் இவருக்கும் தொடர்பு இருக்கிறது. சஹ்ரான் ஹாஷிம் மற்றும் குண்டுவெடிப்பு குற்றவாளிகளுடன் கோவை உக்கடம் பகுதியை சேர்ந்த மூன்று பேர் ஃபேஸ்புக் மூலம் நட்பில் இருந்ததாக தகவல் வந்ததன் அடிப்படையில் புலனாய்வு சோதனை



நடைபெறுவதாக கூறப்படுகிறது.

யார் இந்த முகமது அசாருதீன்?

நேற்று கோவையில் ஏழு இடங்களில் தேசிய புலனாய்வுத் துறையினர் சோதனை நடத்தினர். அதிகாலை தொடங்கி இரவு வரை சோதனை நடைபெற்றது. நீண்ட சோதனைக்கு பின்பு சமூக வலைதளங்களின் வாயிலாக ஐஎஸ் பயங்கரவாத கருத்துக்களை பரப்பி,

தொடர்ச்சி... (பக்கம் -02)



# பொலிஸ்காரரின் சடலத்தை தோண்டி எடுக்கும் பணிகள்



கொக்கட்டிச்சோலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலத்தை பரிசோதனைக்காக தோண்டி எடுக்கும் பணி முனைக்காட்டில் இடம்பெற்றது. பொலிசாரின் சடலம் குழிக்குள் இல்லாததால் தோண்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஆயுதக் குழு ஒன்றினால் கடத்தி செல்லப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் பரிசோதனைக்காக தோண்டி எடுக்கும் பணிகள் முனைக்காடு மயானத்தில் செவ்வாய்க்கிழமை(11) மாலை 4.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன.

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய ஆயுதக்குழுவின் முன்னாள் உறுப்பினர்கள் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சடலத்தினை தோண்டும் நடவடிக்கை மட்டக்களப்பு முனைக்காடு மயானத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 2008 ம் ஆண்டு கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த கிரான்குளத்தைச் சேர்ந்த நாகராசா பிரசாந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றிருந்த நிலையில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் தனது இறுதி நாள் கடமையினை மேற்கொள்வதற்காக பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியில் சென்றிருந்த நிலையிலே காணாமல் போயிருந்தார்.

பொலிஸ் விசாரனையில் காணாமல் போயுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் கடத்தப்பட்டு சுட்டு கொல்லப்பட்டு கொக்கட்டிச்சோலை முனைக்காடு மயானத்தில் புதைக்கப்பட்டதாக சிஐடி யினரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த சடலத்தை தோண்டி எடுப்பதற்கு சிஜடி சப் இன்பொஸ்டர் என். நவரெட்ண மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் வியாழைக்கிழமை (23) அனுமதிகோரியிருந்தார். இதனையடுத்து சடலத்தை இன்று 11 ஆம் திகதி மட்டக்கப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சீ. றிஸ்வான் முன்னிலையில் தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குறித்த சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக 7 பேர் இனங்காணப்பட்ட நிலையில் கபிலன் எனப்படும் சந்தேக நபர் ஏற்கனவே இறந்துள்ளார். இனியபாரதி மற்றும் சின்னத்தம்பி ஆகிய இருவரும் வெளிநாட்டில் இருப்பதாதாவும் ,ஏனைய நால்வரில் ஒருவரான மகிழன் எனப்படுபவர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் சந்தேக நபர்கள் வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைவாக

தொடர்ச்சி... (பக்கம் -15)

# இல்மனைற் அகழ்வை எதிர்த்து மக்கள் போராட்டம்




வாகரையில் தமிழ் மக்களின் நிலங்களை சுவீகரித்து இல்மனைற் அகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்று வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக புதன்கிழமை இடம்பெற்றது.

வாகரை பிரதேச மக்கள், சமூக ஆர்வலர்கள், கிழக்கு பல்கலைக்கழ மாணவர்கள், கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் தமிழ் தேசிய முன்னணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இணைந்து வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கதிரவெளி புச்சாக்கேணி எனும் இரு இடங்களில் முறையே 42 ஏக்கர், 17 ஏக்கர் பரப்பு காணிகள் உள்ளடங்களாக இல்மனைற்று தொழிற்சாலையை அமைக்கப்படுவதையும் மேலும் இதற்காக கரையோரமாக 48 கிலோமீட்டர் நீளம் வரை அபகரித்ததையும் எதிர்த்தே போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கொச்சிக்கடை திருவிழா



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதி நால் விழா இன்று காலை சிறப்பான முறையில் இடம்பெற்றது.

வருடாந்த திருவிழாவில் அதிமேற்றிராணியார் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மறையுரை ஆற்றினார். தமிழ் சிங்கள் மொழிகளில் ஆராதனைகள் இடம்பெற்றன. தமிழ் மொழியிலான மறையுரையினை மன்னார் மறை மாவட்ட ஆயர் ஆற்றினார்.

# கம்போடியா அங்கோர்வாட்டில் இடம்பெற்ற உலக நிருத்தியாஞ்சலி × 2019

முதன் முறையாக கம்போடியா அங்கோர்வாட்டில் இடம்பெற்ற நிருத்தியாஞ்சலி நிகழ்வு உலகின் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இலங்கை, இந்தியாவின் தமிழ்நாடு, பெங்களூர், பம்பாய், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பல்வேறுபட்ட நாட்டியக் கலைஞர்கள் பதினான்கு குழுக்களாக மொத்தம் 300 பேர் வரை வருகை தந்து பங்கு பற்றியிருந்தனர்.

உலக நிருத்தியாஞ்சலி நிகழ்வு மே மாதம் 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்றிறுள்ளது. இதில் பங்குபற்றிய அனைத்து நாட்டிய வித்தகர்களுக்கும் 'பரதகலைமணி' எனும் பட்டமும், சான்றிதழும் வழங்கி கௌரவிப்பும் செய்யப்பட்டது. இந்நிருத்தியாஞ்சலி நிகழ்வில், கிழக்கிலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக நாட்டிய சிரேஷ்ட விரிவுரையாளர்களாகிய கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார், கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன், கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ், கலாநிதி சியாமளாங்கி கருணாகரன் ஆகியோருக்கும், நடன விரிவுரையாளராகிய இராஜரெட்ணம் ஷோபிதர், தற்காலிக விரிவுரையாளர் திருமதி ஆஷாயினி மஜித், நடன ஆசிரியை திருமதி தவரஜனி பிரதீபன், மாணவர்களாகிய விஜிதவாணி, பிரபாளினி ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கும் விதமாக கம்போடிய நாட்டின் கலை கலாசார அமைச்சர் எச்.ஈ.புரோபர்நக் செயங், கலைகலாசாரப் பணிப்பாளர்கள் திருமதி ரோஸ் யருங், கலந்து கொணடதுடன், கலாசார மற்றும் நுண்கலைகள் அதிகார சபையின் பணிப்பாளர் மொர்நேசோபெசாப் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வினை பல்நாட்டுக்கலைஞர்களை ஒழுங்குபடுத்தி சிறந்த முறையில் வழிநடத்திய பெருமை தமிழ்நாட்டைச் சேர்ந்த டினேஸ்குமார், அண்ணாமலைப் பல்கலைக்கழக நடன உதவிப்பேராசிரியர் முனைவர் சின்னமனூர் சித்ரா ஆகியோரைச் சாரும்.

தொடர்ச்சி...

## தமிழகத்தில் தடம் பதித்துவிட்டதா ஐ.எஸ் அமைப்பு?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர், ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேவை போட்டியிட வேண்டுமென வலியுறுத்தி மகஜர் ஒன்றையும் கடந்தவாரம் கையளித்திருந்தனர்.

ஆனாலும் மகிந்த ராஜபக்ஷ அணியோடு மோதுப்படுவதைவிடவும் ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட முறையில் மைத்திரிபால சிறிசேன மோதுவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. அத்துடன் பெத்த தேரர்களோடும் மைத்திரிபால சிறிசேன நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளாரெனவும், இதனால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் பல திட்டங்களை தேரர்களின் ஆலோசனையுடன் குழப்புவதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, முன்கூட்டியே இரகசியத் தகவல் கிடைத்திருந்தும் உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல்களைத் தடு;ப்பதற்கு முப்படைகளின் தளபதியென்ற முறையில் மைத்திரிபால சிறிசேன தவறிவிட்டாரென பாதுகாப்பு உயர்மட்ட அதிகாரிகள் பலர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூறுவதால், அதிருப்தியடைந்துள்ள மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற அமர்வையே ஒத்திவைக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவும் கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச பற்றிய தகவல்களும் வெளிவருவதால் ரணில் விக்கிரமசிங்க மீது கடும் அதிருப்பதியில் இருப்பாகவும் அரசாங்கத்தின் திட்டங்களையே முடக்கும் நிலை காணப்படுவதாகவும் கொழும்பு அரசியல் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளை நடத்த முடியாதென்பது குறிப்பிடத்தக்கது.

# பாண்டிருப்பு விளையாட்டுக்கழகத்தின் 2019 ஆண்டு கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டி!



பாண்டிருப்பு விளையாட்டுக் கழகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி சிறப்பாக நடைபெற்றது. இதில் 32 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் பாண்டிருப்பு பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகத் தலைவர் என்.சங்கீர்த் தலைமையில் இடம்பெற்றன.

இறுதிப்போட்டியில் கல்முனை டொல்பின் அணியும், திருக்கோவில் உதயசூரியன் அணியும் போட்டியிட்டன. இதில் உதயசூரியன் அணி PSC TROPHY 2019 கிண்ணத்தை வெற்றிகொண்டது.

இந்நிகழ்வில் கழகத்தின் ஸ்தாபகர் என். குமாரசூரியம் மற்றும் கழக ஆலோசகர் எஸ். தருமலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டிக்கு அனுசரணை வழங்கிய அனைவருக்கும் பாண்டிருப்பு விளையாட்டுக்கழகம் நன்றிகளையும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி...

## தமிழகத்தில் தடம் பதித்துவிட்டதா ஐ.எஸ் அமைப்பு?

தென்னிந்தியாவில் குண்டு வெடிப்பு சம்பவங்களை நிகழ்த்த ஆள் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டதாகவும், இலங்கை குண்டுவெடிப்பு குற்றவாளியான சஹ்ரான் ஹாசிம் உடன் ஃபேஸ்புக் மூலம் தொடர்பில் இருந்து வந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டு முகமது அசாருதீன் என்ற நபரை கைது செய்தனர். அதுமட்டுமின்றி, 'khilafah GFX' என்னும் ஃபேஸ்புக் பக்கத்தின் வழியாக அவர் ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்பின் கருத்துகளை பரப்பியுள்ளதாகவும் சந்தேகம் நிலவுகின்றது. கொச்சினில் உள்ள தேசிய புலனாய்வுத் துறையின் சிறப்பு நீதிமன்றத்தில் முகமது அசாருதீனை ஆஜர்படுத்தவிருந்தனர். முகமது அசாருதீன் மீது கடந்த மே மாதம் 30ஆம் தேதியே தேசிய புலனாய்வுத் துறை வழக்கு பதிவு செய்துள்ளது. அசாருதீன் மற்றும் அவரது கூட்டாளிகள் இணைந்து ஐஎஸ்ஐஎஸ் கருத்துகளை பரப்புவதாகவும், இலங்கையினைப் போல் தமிழகம் ,கேரளா ஆகிய தென்னிந்திய பகுதிகளில் குண்டுவெடிப்பு சம்பவங்கள் நிகழ்த்த இளைஞர்களை மூளைச் சலவை செய்து ஆள் சேர்த்து வருகின்றனர் எனும் குற்றச்சாட்டின் பேரில் புலனாய்வு விசாரணைகள் நடைபெற்று வருவதாக தேசிய புலனாய்வுத் துறையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகள் தமிழகத்திலும் ஐஎஸ் தடம் பதித்து விட்டதாக என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளதாக ஊடகங்கள் கூறியுள்ளன.
--- நன்றி பிபிசி

# 'அரபு மயப்படுத்தல்'

சீவகன் பூபாலரட்ணம்

இலங்கை முஸ்லிம்கள் தமது கலாசாரத்தை அரபு மயப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தன்னைச் சந்தித்த முஸ்லிம் தலைவர்களிடம் கூறியுள்ளார்.

அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்த முஸ்லிம் தலைவர்களுடனான தனது சந்திப்பின் ஒரு கட்டத்தில், இலங்கை முஸ்லிம்கள் அரபு மயப்படும் பிரச்சினை ஜிகாதிகளின் தாக்குதலை விட ஆழமான ஒரு பிரச்சினை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம்கள் அரபு மயப்படும் விவகாரம் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு எதிரானது என்றும் அது இலங்கை முஸ்லிம்களை இலங்கையின் ஏனைய சமூகங்களில் இருந்து அந்நியப்படுத்திவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரபு அம்சங்கள் தமது கலாசாரத்தின் ஒரு பகுதி என்று முஸ்லிம் தலைவர்கள் கூறியதற்கு பதிலளித்த ராஜபக்ஷ அவர்கள், 15 வருடங்களுக்கு முன்னர்வரை முஸ்லிம்கள் இலங்கையில் இப்படி இருக்கவில்லை என்றும் அதற்கு பின்னர்தான் மாறினார்கள் என்றும் முன்னதாக எங்கள் நாட்டுக்கான ஒரு பாரம்பரிய முஸ்லிம் கலாசாரத்தை அவர்கள் பின்பற்றினார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியவற்றை, இலங்கை முஸ்லிம்கள் குறித்த ஏனைய சமூகங்களின் பெரும்பான்மையினரின் தற்கால பொதுக் கருத்தாகக் கொள்ள முடியும். முஸ்லிம் பெண்கள் அண்மைக் காலமாக முகத்தை மறைக்கும் ஆடைகளை அணிவது, அரபு எழுத்துக்களை பொது இடங்களில் அதிகம் பயன்படுத்துவது மற்றும் வேறு சில வழிகளில் ஏனைய சமூகங்களில் இருந்து விலகி இருப்பதை அவர்கள் இவற்றின் ஊடாகக் குறிக்க முயல்கிறார்கள். இவற்றைப் பற்றி இதுவரை ஏனைய சமூகங்கள் அதிகம் பேசாவிட்டாலும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுக்குப் பிறகு அதிகம் பேசுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இவற்றில் சில விடயங்கள் குறித்து (முகத்தை மறைக்கும் ஆடை, அரபு எழுத்துக்கள்) அரசாங்கமே நடவடிக்கைகளை எடுக்கவும் தொடங்கியுள்ளது.

இந்த அரபு மயப்படுத்தலை ஒருவகை கடும்போக்கு இஸ்லாமாக ஏனைய சமூகங்கள் பார்க்கத் தொடங்கியுள்ளன. அப்படி பார்ப்பது ஏனைய சமூகங்களை பொறுத்தது. ஆனால், அதில் மாற்றத்தைச் செய்யுங்கள் என்பதை ஏனையவர்கள் எந்த அளவுக்கு அல்லது எந்த எல்லைக்கு அப்பால் சென்று சொல்ல முடியும் என்பதுதான் இங்கு கேள்வி.

ஒரு சமூகம் எந்தக் கலாசாரத்தை, பண்பாட்டை பின்பற்றுவது என்பதை அந்தச் சமூகம்தான் தீர்மானிக்க முடியும். தமக்கு அவற்றால் பாதிப்பு வரும் வரை ஏனைய சமூகங்கள் அதில் தலையிட முடியாது. தலையிடல்கூட ஒரு எல்லைவரைதான் இருக்க முடியும். முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்வது, எதனைப் பின்பற்றுவது என்பதை இங்குள்ள ஏனைய சமூகங்கள் கூட



ஒரு எல்லைவரைதான் வலியுறுத்த முடியும். அது முஸ்லிம்களின் சுதந்திரம். நாமும் கூட இதனை ஒரு எல்லைக்கு அப்பால் வலியுறுத்த முடியாது. ஆனால், இங்கு முஸ்லிம்களுக்கு என்று முன்னர் ஒரு பண்பாடு, கலாசாரம் இருந்தது, அது எங்களுக்கு நட்பு ரீதியானதாக, பிடித்ததாக இருந்தது. தற்போது அவர்களில் ஏற்பட்ட, அல்லது ஏற்படுத்தப்பட்ட மாற்றம் எங்களுக்கு சில அச்சங்களை கொண்டு வருகிறது, நட்பு ரீதியானதாக இல்லை என்பதுவரை நாம் சொல்லமுடியும்.

ஆனால், முன்னைய போக்குச் சரியா, இப்போது பின்பற்றுவது சரியா, அதில் மாற்றம் தேவையா என்பதை முஸ்லிம் சமூகமே, அதன் கட்டமைப்புகளுக்குள் விவாதங்களை, கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானிக்க வேண்டும். அதனைச் செய்யுங்கள் என்ற நட்பான கோரிக்கையை நாமும் எவரும் முன்வைக்கலாம்.

இங்கு ராஜபக்ஷ அவர்கள் மாத்திரமல்லாமல் காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவரான சட்டத்தரணி அப்துல் உவைஸ் அவர்கள் உயிர்த்த ஞாயிறுதின அழிவுகள் குறித்து ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழு முன்பாக சாட்சியமளிக்கும் போது கிட்டத்தட்ட இதே விடயத்தை பேசியிருக்கிறார்.

'கடந்த முப்பது ஆண்டுகளாக ஹிஸ்புல்லா அவர்கள் அரசியலில் இருக்கிறார். இந்தக் காலகட்டத்திலேயே காத்தான்குடி அரபு மயப்படுத்தப்பட்டது. குரானை புரிந்துகொள்ள அரபு உதவுகிறது. ஆனால், அரபு எழுத்துக்கள் பொது இடங்களில் தேவையில்லை' என்ற தொனிப்பட அவர் அங்கு சாட்சியமளித்துள்ளார்.

ஆகவே, இந்த அரபு மயப்படுத்தல் என்ற விவகாரம் குறித்து முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளேயே எதிர்ப்பு இருந்தும் வந்துள்ளது என்றும் இதன் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம். ஏனைய பல முஸ்லிம்கள் மத்தியிலும் இத்தகைய கருத்துக்கள் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆகவே, இந்த விடயம் குறித்த ஒரு வாதம் ஏற்கனவே இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வருகின்றது. ஆனால், அது போதவில்லை, அது தற்போதைய சூழலிலாவது அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து இங்கு வலுவாகின்றது.

அப்படியான ஒரு வாதப் பிரதிவாதம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருப்பது ஏனைய சமூகங்களுக்கு ஒரு நல்ல செய்திதான். அவர்கள் அதனை மேலும் ஊக்குவித்து மீண்டும் "நட்பு ரீதியான" ஒரு நிலைக்கு போக வழி செய்வார்கள் என்று ஏனைய சமூகங்கள் எதிர்பார்க்கலாம்.

ஆனாலும் மீண்டும் ஒரு விடயத்தை இங்கு வலியுறுத்துகிறோம். மாற்றங்கள் முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளே இருந்து வருவதே நல்லது. அதுவே நீடித்தும் இருக்கும். அடுத்தவர்களின் கட்டாயத்தில் வருபவை நீடிக்காது. பாதக விளைவையும் தரக்கூடும்.

---

# சொல்லத் துணிந்தேன்! 10





தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

19.05.2019 ஞாயிறு பத்திரிகையொன்றில் நஜீப் பின் கபூர் எனும் முஸ்லிம் அன்பர் எழுதிய கட்டுரையில்,

'ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திசாநாயக்க கூட முஸ்லிம் தலைவர்கள் எப்போதுமே சமூகத்திற்காக அரசியல் செய்யவுமில்லை. அரசியல் ரீதியாக விழிப்பூட்டவுமில்லை. அவர்கள் சமூகத்தின் பெயரில் அரசியல் வியாபாரமே செய்து வருகின்றார்கள் எனக் கடுமையாகக் குற்றம் சாட்டுகின்றார்' என்ற கூற்றினை மேற்கோள்காட்டி அக்கூற்றுடன் அக்கட்டுரையாளர் நூறுவீதம் உடன்பாடும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தைப் பத்திரிக்கையில் படித்தபோது அனுரகுமாரதிசாநாயக்க அவர்களின் முஸ்லிம் தலைவர்கள் பற்றிய கூற்றினைத் தமிழ்த் தலைவர்களுடன் பொருத்திப்பார்த்தேன்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இற்றைவரை காலத்திற்குக் காலம் ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்களின் பங்காளிகளாக இருந்து அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளையும் மட்டுமல்லாமல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அதிகாரசபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகளையும் பெற்றுத் தங்கள் சமூகத்திற்குப் பாரிய சமூக பொருளாதார ஏற்றங்களை முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பெற்றுக் கொடுத்திருந்தும் கூட 'முஸ்லிம் தலைவர்கள் சமூகத்தின் பெயரில் அரசியல் வியாபாரமே செய்கிறார்கள்' என்று கூறப்படுகின்றார்கள் என்றால் தமிழ் மக்கள் இதுவரை அபிவிருத்தியும் இல்லாமல் அரசியல் தீர்வும் இல்லாமல், இருந்ததையும் இழக்கப்பண்ணிவிட்டுத் தாங்கள் மட்டும் பதவிகளையும் அப்பதவியால் வரும் சுகபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு இப்போதும் கூட 'போலித் தமிழ்த்தேசியப் பல்லவியையே தொடர்ந்து பாடி மக்களை ஏமாற்றும் 'வாக்குப்பெட்டி' அரசியல் செய்துவருகின்ற தமிழ்த் தலைவர்களை என்னவென்று கூறுவது.

தமிழ்த்தேசிய உணர்ச்சியூட்டி உசுப்பேற்றிக் கொதிநிலையில் வைக்கப்பட்டுள்ள மக்கள் குறிப்பிட்ட கட்சியொன்றில் தேர்தலில் தும்புக்கட்டை நிறுத்தினாலும் சரி அல்லது கழுதையொன்றைப் பிடித்துக் கட்டிவைத்தாலும் சரி குறிப்பிட்ட கட்சியின் சின்னத்துக்கு எதிரே கண்ணை மூடிக்கொண்டு 'புள்ளடி' போடுபவர்கள் என்ற எடுகோளில் ஏமாற்று அரசியல் செய்கின்ற தமிழ்த் தலைவர்களை என்னவென்ற விமர்சிப்பது.

தமிழர்களுடைய உரிமைப் போராட்ட அரசியல் என்பது இன்று உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக வந்துநிற்கிறது. குட்டக் குட்டக் குட்டுபவனும் மடையன் குட்டக் குட்டக் குனிபவனும் மடையன் எனும் விவகாரம் போன்றுதானே தமிழ்த் தலைவர்களும் குட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். தமிழ் மக்களும் குனிந்து கொண்டே இருக்கிறார்கள். மக்கள் ஏமாறத் தயாராயிருக்கும்வரை தலைவர்களும் ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள். ஓடுகிறவனைக் கண்டால் துரத்துபவனுக்கு இலேசுதானே. தமிழ்மக்களுக்கு இனிமேலாவது சமூக பொருளாதார ஏற்றம் வேண்டுமென்றால் இப்போக்கில் மாற்றம் தேவை. ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் ஓரிடத்தில் நின்று நிதானித்து துரத்திக் கொண்டிருக்கும் தலைவர்களைத் திரும்பிப் பார்க்க வேண்டும். அப்படி நடந்தால் மக்கள் இப்போலித் தலைவர்களைத் துரத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அவர்களாகவே திரும்பி ஓட்டம் பிடிப்பார்கள். அப்போதுதான் தமிழ்மக்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாகும். உண்மையிது: வெறும் பொய்யில்லை.

# கிழக்கின் சனநாயக இயங்கு தளத்தில் ஊடகங்களின் வகிபாகம்

1980 களில் இருந்து 2010 வரைக்குமான வடகிழக்குச் சூழல் தமிழர்களின் சனநாயக இயங்கு தளத்தை வரையறுத்திருந்தது. இங்கு சனநாயக இயங்குதளம் என்பது கருத்துச் சுதந்திரம் தொடக்கம் சனநாயக அரசியலில் ஈடுபடும் உரிமைவரை என எடுத்துக்கொள்ள முடியும். எதைப் பேசுவது, எதை எழுதுவது, யார் தேர்தலில் போட்டியிடுவது போன்ற விடயங்கள் எல்லாம் தனிமனித விடயம் சார்ந்ததாகவோ அல்லது அந்தச் சமூகக் குழுமத்தின் விருப்புச் சார்ந்ததாகவோ இருக்கவில்லை. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்பு கூட இந்த நிலை உடனடியாக மாற்றத்துக்கு வந்தது எனக் கூறமுடியாது. ஊடக அடக்குமுறையும் வெள்ளைவேன் கடத்தல்களும் தொடரவே செய்தன. என்னதான் மைத்திரி – ரணிலின் நல்லாட்சி செயல்திறனற்றதாக இருந்த போதிலும் வெள்ளைவேன் அச்சத்தினை நீக்கி ஊடகச் சுதந்திரத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது.

இன்று நாம் கவனம் கொள்ளவேண்டிய விடயங்களில் ஒன்று தமிழர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்தச் சனநாயக இயங்கு தளத்தைத் தமிழ் மக்களும் தமிழ் ஊடகங்களும் எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பது பற்றியுமாகும்.

ஒரு சனநாயக சமூகத்தில் அரசியல் தலைவர்களாக சிலர் உருவாகிறார்கள் அல்லது உருவாக்கப்படுகிறார்கள். உருவாகுபவர்களாக இருந்தாலும் சரி உருவாக்கப்படுபவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தனிப்பட்ட முறையில் அந்தச் சமூகத்தின் நற்பண்புகளின் எடுத்துக்காட்டுக்கான முன்மாதிரிகளாக இருக்கவேண்டியது முக்கியமானதாகும். இது ஒரு அரசியல் தலைவரின் அடிப்படைத் தகுதியாகும். அடுத்தது மக்களின் அரசியல் அபிலாசைகள் சமூகப் பொருளாதார தேவைகள் என்பவற்றினை அறிந்து அவற்றினை நிவிர்த்திசெய்து கொடுப்பதற்கு எவ்வாறான கொள்கையினை (தத்துவம்) அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறார்கள் என்பதிலும் அந்தக் கொள்கையினை மக்களிடம் எவ்வாறு கொண்டு செல்கிறார்கள் என்பதிலும் தாம் எடுத்துக்கொண்ட கொள்கைக்கு ஏற்ப எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதிலும் அவர்களின் ஆளுமை தங்கியிருக்கின்றது.

இவையெல்லாம் சரியாக இருக்கும் பட்சத்தில்த்தான் அந்தச் சமூகத்தில் ஒரு மக்கள் தலைவன் இருக்கிறான் எனக் கொள்ள இடமுண்டு.



தமிழர் அரசியலில் யுத்தம் ஏற்படுத்திய தாக்கத்தினால் மேற்கூறிய நற்பண்பும் கோட்பாட்டுத் தெளிவும் நடைமுறை அனுபவமும் கொண்ட தலைவர்கள் இல்லாமல் போய் குறுந்தமிழ்த் தேசியவாத வெகுசன அரசியலைத் துதிபாடி அவற்றின் செல்வாக்கால் கொண்டுவரப்பட்டவர்களாகத்தான் குறிப்பாக இன்றைய கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் காரணத்தினால் தற்போதைய கிழக்கின் அரசியல் தலைமைகளிடத்தில் அரசியல் ஞானதிருஸ்டியை காணமுடியாதுள்ளது. தலைமை விரல்காட்டும் அல்லது கண்ணசைக்கும் பக்கம் பாராளுமன்றத்தில் கையுயர்த்துபவர்களாகவே இவர்கள் இருக்கின்றார்கள். இதனால் கிழக்கு மக்களின் அரசியல் அந்தஸ்த்து தேசிய ரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் குறைவாகவே கணிக்கப்படுகின்றது. இந்த அரசியல் தலைமைத்துவ இடைவெளியினை நிரப்புவதற்கான ஒரு போட்டியாக கிழக்கின் இன்றைய சனநாயக இயங்குதளம் மாறியுள்ளது போல் தெரிகிறது.

## அதிகரித்துவரும் செய்தியாளர் சந்திப்புக்களை வீணடிக்கக் கூடாது

தமது கருத்தைச் சொல்வதற்கும் அரசியலில் ஈடுபடுவதற்குமான உரிமை அனைவருக்கும் உண்டு என்பதையும் அவற்றினை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்குரியது என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தில் தமது பணத்தினையும் தமது கல்வியறிவையும் முன்வைத்து கிழக்கு மக்களின் காவலனாக மாறிவிடலாம் எனச் சிலர் பெருங்கனவுகளோடு பத்திரிகையாளர் மகாநாடுகளை நடாத்தி மக்களை ஏமாற்ற முயற்சிப்பதும் அதற்கு ஊடகங்கள் கருவியாகச் செயற்படுவதையும் எவ்வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

இந்த இடத்தில் ஊடகங்களின் பங்கு முக்கியமானதாக இருக்க வேண்டும். சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவோ சமூகப் பொறுப்பற்று தங்களுக்கான இருப்பை வெளிப்படுத்தும் தளமாக அரசியலை கையாள முனையும் பணம்படைத்தவர்களின் செல்லப்பிள்ளைகளாகவோ ஊடகங்கள் இருக்கக்கூடாது.

மாறாக மக்களைச் சரியான முறையில் அரசியல் மயப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களைச் சார்ந்ததாகும். கடந்த காலங்களில் தமிழ் ஊடகங்கள் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தப்படுவதற்கு மாறாக தனிமனித வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டதன் விளைவே தமிழ் மக்களின் இன்றைய அரசியல் அனாதை நிலைக்குக் காரணம் என்பதை அவ்வளவு எளிதில் மறுத்துவிடமுயாது. தமிழ் ஊடகங்களும் அவற்றின் ஊடகவியலாளர்களும் கடந்த காலங்களில் தாம் விட்ட தவறுகளை புறநிலையாக தங்களை சுயவிமர்சனம் செய்வதும் இன்றைய நிலையில் தங்களின் கடமை என்ன எனும் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்வதும் அவசியமானதாகும்.

ஊடகவியலாளர் மகாநாடு என்பது இன்று இந்த சனநாயகத் தளத்தில் தம்மை பெரிய மகான்களாகக் காட்டிக்கொண்டு மற்றவர்களைக் குறைசொல்வதற்கும் தங்களது போட்டோவையும் பேச்சையும் ஊடகங்களில் வெளிப்படுத்தி தாங்கள் ரசிப்பதற்கும் ஒன்றாகவே இருக்கின்றது. நான் அறிந்தவரை சிலரை பார்த்திருக்கிறேன், தங்களுக்கான விமர்சனங்களை யாராவது முன்வைக்கும் போது அந்த விமர்சனத்தை தர்க்கபூர்வமாக அணுகி எதிர் விமர்சனத்தை முன்வைப்பதற்கு திராணியற்று, உடனடியாக ஊடகவியலாளர் மகாநாடுகளை நடாத்தி தங்களின் வீரப்பிரதாபங்களை முன்வைக்கிறார்கள். இந்த முன்வைப்பில் ஏற்கனவே குறிப்பிட்ட விமர்சனங்களுக்கான பதில் இருக்காது. அத்துடன் பல ஊடகவியலாளர் மகாநாடுகளில் கூறிய ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறுகிறார்களே தவிர புதிய சிந்தனைகள் அல்லது செயற்திட்டங்கள் தொடர்பாக எதுவுமேயில்லை. 'பானையில் இருந்தால்த்தான் அகப்பையில் வரும்' என்பது போல இவர்கள் எல்லாம் அரசியல் வங்குரோத்துத் தனமுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

எழுவான் வேலன்


அடுத்து இன்னொரு வேடிக்கையும் நடக்கின்றது ஊடகங்களைப் பெரிதளவுக்குப் பார்க்கமாட்டார்கள் ஆனால் ஊடகவியலாளர் மகாநாடு முடிந்த கையுடன் தங்களுடைய படம், பேட்டி எந்த எந்த ஊடகங்களில் வெளிவந்துள்ளன என்பதை மிக ஆவலுடன் தேடிப் பார்த்து உளத்திருப்தியடைகிறார்கள். மக்களுக்காக வெளிப்படுத்திய கருத்துக்கள் மக்களை எவ்வளவு தூரம் சென்றடைந்துள்ளது, அதன் பிரதிபலன்கள் எப்படி இருக்கின்றது என்பதிலும் பார்க்க தங்களைத் தாங்களே பார்த்து திருப்திப்பட்டுக் கொள்ளும் இந்த மனநிலை ஒரு வகையான உளவியல் நோயாகும். இவ்வாறான உளவியல் நோயாளிகளுக்கெல்லாம் ஊடகங்கள் கருவியாகப் பயன்படக்கூடாது.

எனவே இன்று கிழக்குத் தமிழர்களுக்குத் தேவை அவர்களை சரியான திசைவழி வழிநடத்திச் செல்லக்கூடிய அரசியல் தலைமைத்துவமும் அரசியல் தந்திரோபாயமுமாகும். அவற்றினை வழங்கக்கூடியவர்களை அடையாளங் கண்டு மக்களுக்கு தெரியப்படுத்துவதும் அவ்வாறான தலைமைத்துவத்தினை பலப்படுத்துவதும் ஊடகங்களின் கடமையாகும். இதை விடுத்து 'தடிஎடுத்தவன் எல்லாம் தண்டக்காரனுகள்' என்பது போல ஊடகவியலாளர் மகாநாட்டுக்கு அழைப்பவர்கள் எல்லோரையும் தலைவர்களாக்க முற்படக் கூடாது என்பதுடன் அவர்களின் கடந்தகால நடத்தைகளையும் சமூக அக்கறையினையும் கேள்விகளுக்கூடாக தோலுரித்துக் காட்டுவதற்குத் தயங்கக் கூடாது என்பதும் இந்த மக்களின் சார்பான வேண்டுதலாகும்.

---

## வணங்கி வழி அனுப்பி வைக்கிறோம்...

## ஈழத் தமிழ் நாடக உலகையும் வலுவூட்டிய கிரீஸ் கர்நாட்



சி. மௌனகுரு

நம் காலத்தில் வாழ்ந்த மிகப்பெரிய நாடக ஆளுமை
கிரீஸ்கர்நாட்.
நாடகம் இலக்கியம் சினிமா என பல் துறை கைவந்த கலைஞர்,

முற்போக்கு மனதினர்.
தனது 81 ஆவது வயதில் அவர் காலமானார்.
ஆழ்ந்த புலமை மிக்க இவரின் நாடகங்களும் புனைகதைகளும்
சினிமாவும் கன்னட கலையுலகிற்கு வலுவூட்டின.

இவரது நாடகங்கள் பல.
அவற்றுள் இரண்டு ஈழத்தமிழ் நாடக உலகையும் வலுவூட்டியுள்ளன.

ஒன்று “துக்ளக்”.
1964 ஆம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட இந்நாடகத்தை 1980 களில் பாலேந்திரா யாழ்ப்பாணத்தில் மேடையிட்டார்.

இதன் மூலம் கிரிஸ் கர்னாட் ஈழத் தமிழ் நாடக ஆர்வலர்களுக்கு அறிமுகமானார். இவருடைய இன்னொரு நாடகம் “நாக மண்டலம்”. 1988 இல் அது எழுதப்பட்டது. இதனை சுமதி சிவமோஹன் 1995 களில் கொழும்பு லும்பினி அரங்கில் னேடையிட்டார்.

இவ்வண்ணம் ஈழத் தமிழ் நாடக உலகையும் வளமூட்டிய பெரும் நாடக விற்பன்னரான கிரீஸ் கர்நாட்டை நாம் வணங்கி
வழி அனுப்பி வைக்கிறோம்.

## கேலிச் சித்திரம்



# மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற்போகும் / அழிந்துபோகும் கலாசாரச் சொத்துகள்

## நாம் செய்யவேண்டியது என்ன

சித்திரலேகா மௌனகுரு

கலாசாரச் சொத்துகள் என்பன யாவை என்ற கேள்வி இக்கட்டுரையின் தலையங்கத்தை வாசிப்போருக்கு எழக் கூடும். சட்டென்று மனதில் தோன்றுவது உணவுப் பழக்கமும் குறிப்பாகப் பெண்களின் ஆடை அணிகளும்தான்.

ஆனால் கலாச்சாரச் சொத்துக்கள் என்ற தொடர் ஆழமானதும் பரந்தளவிலுமான அர்த்தத்தைக் கொண்டது. இது பற்றி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கலாசாரஅவையினால் வெளியிடப்பட்ட தேனகம் என்ற சஞ்சிகைக்கு 2011இல் ஒருகட்டுரை சிலபடங்களுடன் சேர்த்து எழுதியிருந்தேன். அதுபற்றி அக்கறை எடுக்கவேண்டியோர் பெரிதாக எதுவும் செய்யாததால் பரந்த ஒரு மட்டத்திற்கு இவ்விடயத்தை எடுத்துச் சென்று விவாதங்களையும் சிந்தனைகளையும் முடிந்தால் செயல்வாதத்தையும் உருவாக்கும் பேராசையில் கலாசாரச் சொத்துக்கள் என்ற இவ்விடயத்தை அரங்கத்தில் முன்வைக்கத் துணிந்தேன்.

**கலாசாரச் சொத்துகள் என்றால் என்ன?**

கலாசாரச் சொத்துகள் என்பவை ஒரு இடத்தின் மக்களது வாழ்வுடன் இணைந்தவையாகும். அவை நிகழ்காலத்தையும் இறந்தகாலத்தையும் அதன் நினைவுகளையும் பிணைப்பவையாகும். இந்த இணைப்புக்கு மூன்று காலத்திற்கும் இடையேயான தொடர்ச்சியின் இழையாகச் செயற்படுகின்ற ஆற்றல் உள்ளது. பல்வேறுவகையான பாரம்பரியங்களினதும், பண்பாடுகளினதும் எடுத்துக்காட்டுகளாகவும் எச்சங்களாகவும் இவை காணப்படுகின்றன. அவ்வகையில் ஒரு இடத்தில் வாழும் சமூகங்களின் வரலாற்றை இவை எடுத்துக்கூறுகின்றன. வரலாற்றுச் சின்னங்களின் இத்தகைய இயல்பினாலேயே அவற்றைப் பாதுகாக்கவும், பேணவும் வேண்டும் என பல்வேறு துறை அறிஞர்களும் கருதுகின்றனர்.

வரலாற்றுச் சின்னங்கள், இடங்கள் ஆகியவற்றைப் பேணுவதென்பது அவற்றை அடையாளம் காணுதல், அவற்றை அவற்றின் மூல நிலையில் (முடியுமாயின்) பேணுதல் (Conserve) பாதுகாத்தல் (Protect) ஆகிய முயற்சிகளை உள்ளடக்கியதாகும்.

கட்டிடங்கள், பொருட்கள், மரங்கள் உள்ளிட்ட நில அமைப்புகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கைவினைப்பொருட்கள்




முதலியவை இப் பேணுதலுக்குள் அடங்கும். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வரலாற்றுத் தொல்பொருட்கள் காணப்படுகின்றன என்பதும் அவை கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன என்பதும் பலரும் அறிந்த விடயம். அடையாளம் காணப்படாமல் காலப்போக்கில் பல அழிந்ததும் உண்டு.

இச் சிறு குறிப்பில் மட்டக்களப்பின் மண்முனை வடக்கு செயலகப் பிரிவில் காணப்படும் சில வரலாற்றுச் சின்னங்களைக் குறிப்பாகக் காலனித்துவ காலகட்டத்தைச் சேர்ந்தவற்றைத் தொட்டுக்காட்ட முயல்கிறேன். இவ்வரலாற்றில் பண்பாட்டுச் சின்னங்கள் பற்றிய ஆர்வத்தையும், சிந்தனையையும் செயற்பாட்டையும் ஊக்குவிக்குமுகமாகவே சில எடுத்தக்காட்டுகளையும் கருத்துகளையும் இக்கட்டுரையில் பதிவு செய்துள்ளேன்.

மண்முனை வடக்கு செயலகப்பிரிவில் முக்கியமான பெரிய சின்னங்கள் காணப்படுகின்றன.

1. டச்சுக்கோட்டை
2. இரும்பினாலான பாரம்தூக்கிகள்
3. கல்லடிப்பாலம்
4. வெளிச்சவீடு
5. வீடுகள், வணக்க ஸ்தலங்கள் போன்ற கட்டிடங்கள்
6. மரங்கள், நில அமைப்புகள்

**டச்சுக்கோட்டை**

இலங்கையில் காலனித்துவ காலகட்டத்தில் பல கோட்டைகள் அமைக்கப்பட்டன. முதன் முதல் கோட்டைகள் அமைத்தவர்கள் போர்த்துக்கேயர். மட்டக்களப்பில் டச்சுக்கோட்டை எனத் தற்போது அழைக்கப்படும் கோட்டையைப் போர்த்துக்கேயர் 1628ஆம் ஆண்டு கட்டினர். எனினும் டச்சுக்காரர் கிழக்குக் கரையில் இறங்கியபோது இது அவர்களால் 1638இல் கைப்பற்றப்பட்டது. அக்காலத்தில் 1643 இல் சேதமான அதனை மீண்டும் டச்சுக்காரர்கள் 1668 இல் கட்டினார்கள். பின்னர் பிரித்தானியருடைய ஆளுகை இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் 1795ஆம் ஆண்டு டச்சுக்காரர் எத்தகைய எதிர்ப்புமின்றி பிரித்தானியரிடம் மட்டக்களப்புக்கோட்டையைக் கையளித்தனர்.

பிரித்தானியர் 1836ஆம் ஆண்டுவரை கோட்டையைத் தமது தளமாகப் பயன்படுத்தினர். அதில் பெரியளவான மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. எனினும் அது மாவட்டத்தின் நிர்வாக அலுவலகமாக மாற்றப்பட்டதன் பின்னர் பல கட்டிடங்கள் பிரித்தானியராலும் பின் மாவட்ட நிர்வாகத்தினராலும் கட்டப்பட்டுள்ளன.

பலர் மட்டக்களப்புக் கோட்டை பற்றி எழுதியுள்ளனர். தங்கேஸ்வரி கதிர்காமர் அவர்கள் எழுதியதும், நான் மாவட்டக் கலாசார பேரவையினால் வெளியிடப்படும் தேனகம் சஞ்சிகையின் இதழில் 2011இல் எழுதிய கட்டுரையும் மிக முக்கியமானவை. கோட்டையின் வரலாறு அதன் அமைப்பு ஆகியவை பற்றிய தகவல்களை இவை தருகின்றன. இலங்கையிலுள்ள கோட்டைகளில் மிகச் சிறியதும் அழகியதும் எனப் புகழப்படும் இக் கோட்டையின் தற்போதைய பரிதாபமான நிலைக்கு அதனை நிர்வாகம் செய்வோரும் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் கிழக்குப் பிராந்தியக் கிளையும் பொறுப்பெடுக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தேன்.

2013 ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகத்தின் கலாசாரப் பிரிவின் ஆதரவில் கோட்டையை மீண்டும் அதன் பழைய நிலைக்கு மீளப் புதுப்பிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பாலி விஜயரத்தின எனும் பிரபல்யமான கட்டிடக் கலைஞர் அதனைப் பொறுப்பேற்றுத் தனது குழுவினருடன் இப்பணியை ஆரம்பித்தார். இதன் பயனாகச் சுற்றுச் சுவர் பாதுகாப்பு அரண் கோட்டையின் இடது பக்கக் கிளையின் பகுதியும் புனரமைக்கப்பட்டன.

கோட்டையின் வரலாறு இராணுவ நிலையுடனும் போருடனும் உள்ள வரலாற்றைப் பிரதிபலிப்பது என்ற அடிப்படையில் இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்ட பதுங்கும் அறை துப்பரவு செய்யப்பட்டு அப்படியே விடப்பட்டது.

சுற்றுச் சுவர்கள் துப்பரவு செய்யப்பட்டன. அதன் பழைய நிலைக்கு திரும்பிய கோட்டை மீண்டும் அரசாங்க செயலகத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஸ்ரோர் ஆகவும் பின்னர் சிறு சிறு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டது. அரசாங்க செயலகம் திராய்மடுவிற்கு இடமாறும் போது மீண்டும் இப்பகுதி புனரமைக்கப்படும் என நம்புகின்றேன்.

அப்போது பாலி விஜயரத்தினவினால் தயாரிக்கப்பட்ட கோட்டையின் மாதிரி வரைபடநூலும் அதிலுள்ள தகவல்களும் பயன்படுத்தப்படும் என நம்பகின்றேன்.

இக்கலாசாரச் சொத்துகள் எத்தகைய முறையுமின்றி அழிக்கப்படுவதற்கு சமீபத்தைய உதாரணம் “பேர்லஸ் கவுஸ்” என அழைக்கப்பட்ட அழகிய சிறு கட்டிடமாகும்.

கிறீன் வீதியின் முகப்பில் அமைந்திருந்தக் கட்டிடம் பிரித்கானியர் காலத்தது. வின்சன்ற் பாடசாலையில் நான் படித்த காலத்தில் செய்முறைக்காக எம்மை ஆசிரியர்கள் அங்கு அழைத்துச் செல்வர்.

இவ்வருடம் மார்ச் மாத முற்பகுதியில் திடீரென அழிக்கப்பட்டு இரு அடிக்கல் நாட்டும் துண்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

ஒன்று ஏம்.ஏல்.ஏ.எம் ஹிஸ்புல்லா புதிய தபால் கட்டிடத்திற்காகக் நாட்டியது. மற்றது கண்டிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வைத்தது. அவர் ஏன் இங்கு வந்தார் என்பது புரியவில்லை. திடீரென வந்தார்கள். உடைத்தார்கள்.

அடுத்த நாள் அடிக்கல் நாட்டினார்கள் என அக்கம் பக்கத்தார் கூறினார்கள். அவ் வளவில் வேலி ஓரமாக மாவிலங்கு மரம் ஒன்று உள்ளது. அதுவும் அரியதொரு மரம் என நினைக்கிறேன். அதுவும் இதுவரை வெட்டப்பட்டிருக்குமோ தெரியாது. இப்படி எமது சொத்துக்கள் அழிபடுவது பற்றி அங்கலாய்க்க நிறைய உண்டு.

இது பற்றி செய்வதற்கும் நிறைய உண்டு.



# வரணி தேரிழுப்பு நிறுத்தம் : யாருக்கும் வெட்கமில்லை

யாழ்-வரணி என்பதைவிட ஜெ-ஸி மெஷின் புகழ் வரணி வடக்கு கண்ணகி அம்மன் ஆலயம் என்று சொன்னால் எல்லோருக்கும் புரியும். ஆம் கடந்த ஆண்டு அந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா இடம்பெற்ற போது அந்த பிரதேசத்தில் குறித்த ஒரு சமூக பிரிவினருக்கு மட்டுமே உரிமையாக இருந்துவந்த தேரிழுக்கும் உரிமைக்கு சோதனை வந்தது.

அந்த சாதியின் பெயரால் 'தகுதி' படைத்திருந்தவர்களுக்கு தேரிழுக்கும் அளவுக்கு ஆளணி வலிமை இருக்கவில்லை. அதன் காரணமாக தலித் மக்களையும் இணைத்து அந்த தேரை இழுக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த நிர்ப்பந்தத்தை தவிர்ப்பதற்காக ஜெ-சி மெசினை கொண்டுவந்து அத்தேரினை இழுத்தனர். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தினையும் தாண்டி வரணி ஆலய நிர்வாகத்தினரது ஆதிக்க சாதி மனோபாவம் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாக நேரிட்டது.

மீண்டும் இவ்வாண்டு குறித்த வரணி வடக்கு அம்மன் ஆலய திருவிழா அண்மித்தபோது இந்த வருட தேரிழுப்பை எப்படி நடத்துவது என்பதில்



அந்த ஆலயத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ஆதிக்க சாதியினர் பெரும் சிக்கலை எதிர்கொள்ள நேர்ந்தது. தலித் மக்கள் சார்பில் வடம் பிடித்து தேர் இழுப்பதற்கான உரிமை கோரப்பட்டது. அதைத்தொடர்ந்து இம்முறை ஆலய திருவிழாவை நடத்துவதில்லை என்கின்ற முடிவினை ஆலய நிர்வாகத்தினர் எடுத்துள்ளனர்.

இதன்காரணமாக வரணி ஆலயத்தை திருவிழாவுக்காக திறக்க வேண்டியும் அதில் அப்பிரதேச தலித் மக்களுக்கு சமத்துவ அந்தஸ்து கோரியும் சத்தியாக்கிரகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்துக்கு முழு ஆதரவு தெரிவித்து சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் ஒருவாரகாலமாக அவர்களுடைய சத்தியாகிரகத்தில் இணைந்து பங்கெடுத்து வருகின்றனர்.

சாதி ஒடுக்குமுறையில் எவ்வித தளர்வுகளையும் ஏற்படுத்த தயாரில்லாத நிலையிலேயே யாழ்ப்பாண சமூக கட்டமைப்பு இன்றுவரை இயங்கிவருகின்றது என்பதற்கு இந்நிகழ்வு ஒன்றே போதுமான சாட்சியாகும்.

அதனை உறுதிப்படுத்தும் முகமாக யாழ்-தென்மாராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் மட்டும் 102 ஆலயங்களில் இதேபோன்று தலித் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றமை பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன. தலித் மக்கள் சார்பான ஒரு அமைப்பினர் அந்த தகவல்களை திரட்டி இந்து கலாசார அமைச்சுக்கு நீதிகோரி அனுப்பிய கடிதத்தின் பிரதியொன்றினை வன்னியில் வாழும் சுயாதீன ஊடகவியலாளர் "தமிழ் செல்வன்" தனது முகநூலில் அண்மையில் பதிவிட்டிருந்தார்.

## '102 ஆலயங்களில் தலித் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன'

அதனடிப்படையில் வடமாகாணத்தில் காணப்படும் 38 பிரதேச செயலகங்களிலும் இதுகுறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டால் பல அதிர்ச்சிதரும் புள்ளிவிபரங்கள் கிடைக்கலாம்.

இவை ஒருபுறமிருக்க தமிழீழ போராட்ட காலத்தில் தமிழர்கள் எல்லோரும் ஒரே தேசியமாகிவிட்டனர், சாதி ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சிலர் கருத்துரைத்தபோது அண்மையில் காலமான எழுத்தாளர் என்.கே.ரகுநாதன் "இல்லை சாதியானது குளிரூட்டிக்குள் வைத்த கோழி மாதிரி பாதுகாப்பாக உள்ளது. தேவையானபோது அது வெளியே வரும்" என்று சொன்னார். அவரது எதிர்வுகூறல் இன்று நிதர்சனமாகி உள்ளது.

இந்நிலையில்தான் தமிழ் சமூகமும் சாதியும் என்பது குறித்த புரிதல்களை நோக்கி நாம் சிந்தனையை தூண்டவேண்டியுள்ளது. இப்படியே எம்மினத்தின் ஒரு பகுதியினரை "தாழ்த்தப்பட்டவர்கள்", "கீழ்ச்சாதிகள்", என்று ஒதுக்கிவைத்துக்கொண்டே கட்டுப்பெட்டித்தனமாக வாழப்போகின்றோமா? அல்லது சாதிய வேறுபாடுகள் என்பன பழமைவாய்ந்த சிந்தனைகள், சமூக முன்னேற்றத்துக்கும், நவீன உலகு நோக்கிய பயணத்துக்கும் தடையான பழக்கவழக்கங்கள் என்று இவற்றை விட்டொழிக்கப்போகின்றோமா?

இப்பத்தியை படிப்பவர்கள் கிழக்கில் இப்படி சாதியில்லை, நாங்கள் சாதி பார்ப்பதில்லை என்று முணுமுணுக்க கூடும், அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். ஆனால் இங்கே கிழக்குமாகாணத்தில் சாதி இல்லாமல் இல்லை. இருக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தைப்போன்ற தீண்டாமை கொடுமைகள் ஒப்பீட்டளவில் கிழக்கில் குறைவானவை எனலாம். அதற்கு பல காரணங்கள் உண்டு. அவை தனியொரு கட்டுரையாக அலசப்பட வேண்டியவையாகும்.

'யாழ்ப்பாணமே இன்றுவரை ஈழத் தமிழர்களின் கலாசார அடையாளமாக திகழ்கின்றது. யாழ்ப்பாண தலைமைகளே தமிழர்களின் அரசியல் பாதையை தீர்மானிக்கின்றனர். யாழ்ப்பாணத்தின் சிந்தனை முறையே தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை வடிவமைக்கின்றது.' என்கின்றபோது இவையனைத்திலும் இந்த சாதிய சிந்தனையும் கலந்துதானே இருக்கும். ஆம் அதனாற்தான் இந்தச் சாதிய சமூகம் பற்றிய மேலதிக புரிதல்களை நோக்கி நாமும் நகரவேண்டும். அதுபற்றி நாமும் பேசியாக வேண்டும் என்கின்ற தேவையெழுகின்றது.

சாதிய வேறுபாடுகளை காரணமாக கொண்டு, சமூகத்தின் ஒருபகுதியினர் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவதும், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவதும் குற்றமாகும் என 1971ஆம் ஆண்டு இலங்கையின் சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் வலியுறுத்துகின்றது. ஆனால் நாமோ மரபுகளின் பெயராலும் கலாசாரத்தின் பெயராலும் கடவுள்களின் பெயராலும் அதனை காப்பாற்றி வருகின்றோம். குறிப்பாக இந்த ஆலயங்களில் காட்டப்படும் சாதி வேறுபாடுகளுக்கு நம்மவர்கள் சொல்லுகின்ற விளக்கம் ஒன்று உண்டு. அதாவது "அது எமது முன்னோர்கள் காலத்திலிருந்து நீண்டகாலமாக தொடருகின்ற பண்பாடு

### அறுமக்குட்டிபோடி

அதனை எப்படி மாற்றுவது?" என்கின்ற முணுமுணுப்புகளை நாம் அடிக்கடி கேட்க நேர்ந்திருக்கும். சிலவேளைகளில் அது நியாயமான கேள்வியாகவே எமக்கு தோன்றியுமிருக்கும். ஆகவே அதற்கு மறுத்துரைப்பது கூட எம்மால் முடியாதிருந்திருக்கும். ஆனால் எமது முன்னோர்களெல்லாம் கோமணத்துடன் திரிந்தவாறே நாமும் இன்று திரிகின்றோமா? அல்லது எமது மூதாதையர் காட்டுமிராண்டிகளாக அம்மணமாக திரிந்ததுபோல் எம்மால் இன்றும் வாழமுடியுமா? என்று நாம் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

"நிகரென்று கொட்டுமுரசே இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்
தகரென்று கொட்டுமுரசே பொய்மை சாதி
வகுப்பினையெல்லாம்"

என்று பாரதி பாடி நூறு வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் பாரதியை பிடிக்கும். பலரது வீட்டு சுவர்களை இன்றும் பாரதியின் படங்கள் அலங்கரிக்கும். எல்லா பாடசாலைகளிலும் பாரதி இல்லங்கள் இருக்கும், ஒவ்வொரு வினோத உடை போட்டியிலும் எமது குழந்தைகளை பாரதியாக அலங்கரித்து நடிக்கவைத்து நாமும் பூரித்து நிற்போம், ஆனால் சாதிகள் இருக்கவேணும் பாப்பா என்றுதான் காலம்காலமாக இந்த சாதியை கட்டிக்காத்துவருகின்றோம். இல்லாவிட்டால் இன்று எதற்கு வரணியில் தலித் மக்கள் சத்தியாக்கிரகம் இருக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது? ஆம் இந்த சாதியை கட்டிக்காப்பது குறித்து நம்மில் யாருக்கும் வெட்கமில்லை.

## கேலிச் சித்திரம்



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## கணபதிபுரம் மாதிரிக்கிராமமும், கச்சக்கொடிசுவாமிமலை மக்களும்!



படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், முதலாவது மாதிரிக்கிராமம் கச்சக்கொடிசுவாமிமலை கிராமத்தில், கணபதிபுரம் என்ற பெயருடன் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இச்செய்தியினை கேட்டதுமே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்கிறார் சீனித்தம்பி.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைக்கிராமமாக கச்சக்கொடிசுவாமிமலை அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள்தான் மாவட்டத்தின் எல்லையினைப் பாதுகாத்து வருவதுடன் நாள்தோறும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். மாவட்டத்தின், பிரதேசத்தின் எல்லைக்கிராமமாக இக்கிராமம் அமைந்துள்ளது. அதேவேளை காடுகளை சூழவே இக்கிராமம் அமைந்துள்ளமையினால், நாள்தோறும் யானைத்தாக்குதலுக்கு ஆளாகின்ற, அஞ்சிவாழ்கின்ற மக்களாக இக்கிராமத்தவர்கள் உள்ளனர். இக்கிராமத்தில் உள்ள மக்கள் தமது சேவைகளை பெறுவதற்கும், பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கொக்கட்டிச்சோலை நகரத்திற்கே செல்லவேண்டிய நிலையும் இருக்கத்தான் செய்கின்றது. இதன்காரணமாக இவற்றிற்காக இவர்கள் ஒருநாள் பொழுதினை கழிக்கவேண்டிய துர்ப்பாக்கியம் உள்ளமையினையும் மறைக்க முடியாது. இங்குள்ள மக்கள் தேவை கருதி வேறு இடங்களுக்கு சென்றாலும், மாலை 5மணிக்கு முன்னமே தமது கிராமத்தினை அடைந்துவிட வேண்டும். இல்லாதுவிடின் யானைத் தாக்குதல்களுக்கு ஆளாகவேண்டி ஏற்படும் என்பதனையும் ஞாபகமூட்டாமல் இருக்கவும் முடியாது.

போக்குவரத்து என்கின்றபோது, கொக்கட்டிச்சோலை நகரில் இருந்து மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஊடாக மாத்திரம் போக்குவரத்துச் செய்வதாகவிருந்தால் அது மழை காலங்களில் சாத்தியமற்றது. ஏனெனில் கங்காணியார் குளத்தினை கடந்தே கச்சக்கொடிசுவாமிமலை கிராமத்திற்கு செல்ல வேண்டும். அவ்வாறாயின் மழைகாலங்களில் குளம் நிரம்பிவிடும். குளத்தின் வான்கதவு திறந்துவிடப்படும், கால்வாயின் ஊடாக நீர் வழிந்தோடும், இதனால் போக்குவரத்து தடைப்படும். கால்நடையாக செல்பவர்கள் மாத்திரம் குளக்கட்டின் மீதாக நடந்துசெல்ல முடியும். தனிமையில் செல்வதென்பதும் அச்சத்தினையே கொடுக்கும். கொக்கட்டிச்சோலை நகரத்திற்கோ பிரதேச செயலாளர் செயலகத்திற்கோ சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு செல்வதற்கான இலகுவான பாதையும் இதுவேயாகும். இதற்கு குளத்திற்கு அருகில் பாலமொன்றினை அமைப்பதன் பயனாக இவ்வீதியினை எப்போதும் பயன்படுத்தக்கூடியதாகவிருக்கும்.

கொக்கட்டிச்சோலை – தாந்தாமலை வீதியினைவிட்டு குறித்த கிராமத்திற்கு செல்வதற்கு இன்னும் சில வீதிகள் இருக்கின்றன. அவ்வீதிகளினூடாக செல்வதாயின் அருகில் உள்ள வெல்லாவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களினை கடந்தே செல்லவேண்டும். அவைகளில் சிலவற்றினை வீதியென்று சொல்வதைவிட அங்குள்ள மக்கள் வண்டு என்றே சொல்வார்கள். ஏனெனில் நீரோடும் பெரியளவிலான வாய்க்கால்களின் தடுப்புசுவர்களாகவே அவை இருக்கின்றமையே அதற்குக் காரணம். இதைவிடவும் வெல்லாவெளி பாடசாலையின் அருகாக செல்கின்ற வீதியின் ஊடாக சென்று அம்பாறை பிரதான வீதிக்குச் சென்று அங்கிருந்து கச்சக்கொடிசுவாமிமலை கிராமத்திற்கு வருகைதர வேண்டும். இவ்வீதியினால் வருவதாயின் அதிக தூரம் பயணிக்க வேண்டும். இவ்வாறு போக்குவரத்திலும் சிரமங்களை எதிர்கொள்கின்ற இம்மக்கள், சேனைப்பயிர்ச்செய்கைகளையும், வேளாண்மையினையும், மாடுவளர்ப்பினையும் செய்துகொண்டு வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் பெறுவதும் சாவாலானதே. கோடை காலங்களில் குடிநீருக்கு மக்கள் அலையும் நிலைமை இருக்கிறது. இவ்வாறு பிரச்சினைகளுடன், அங்காங்கு மேடுகளில் வீடுகளையும், குடிசைகளையும் அமைத்து வாழ்கின்ற இக்கிராமத்து மக்களை ஒன்றிணைத்து ஒரே இடத்தில் குடிசைகள் இன்றி, கல்வீடுகளிலே வாழ்கின்ற சூழலினை தற்போது ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர்.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சின் ஊடான நிதியுடனும், மக்களின் பங்களிப்புடனும் மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகத்தின் தெரிவுடனும் கச்சக்கொடிசுவாமி மலையில் கணிபதிபுரம் என்ற பெயருடன் 25 வீடுகளைக் கொண்ட மாதிரிக்கிராமம் அமையப்பெற்றுள்ளது. வெறுமனே வீடுகளை மாத்திரம் அமைத்துக்கொடுக்காமல், வீடுகளுக்கான மின்சார வசதி, நீர்வசதி, பிரவேசப்பாதை, உள்ளகப்பாதை போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன.

சொந்தவீடுகள் இல்லாத, குடிசைவீட்டில் வாழ்ந்த, பாதுகாப்பற்ற வீடுகளில் வாழ்ந்த மக்களிற்காக இவ்வாறான வசதிகளுடன் வீடுகள் அமைத்துக்கொடுப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதென இங்குள்ள மக்களும் பேசிக்கொள்கின்றனர். இத்தோடு இம்மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாக யாரும் கருதவும் முடியாது. இம்மக்களின் தேவைகள் இன்னமும் உள்ளன. அவைகளும் நிவிர்த்தி செய்யப்பட வேண்டியவையே. குறிப்பாக மேய்ச்சல், வீதி, போக்குவரத்து, பாடசாலைக்கான ஆளணி இன்மை, மீனவர்களுக்கான பிரச்சினைகள், தொழில்வாய்ப்பு போன்றனவும் செய்துகொடுப்பட வேண்டியதும் அவசியமானதொன்றே. பிரதேசசெயலகம் எடுத்த முயற்சி வரவேற்கத்தக்கதொன்றாகவுள்ளதோடு, இன்னமும் பல மாதிரிக்கிராமங்கள் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்றமை வரவேற்கத்தக்கதே. இக்கிராமத்தின் வளர்ச்சி குறித்தும், தேவை குறித்தும் அறிந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதும் அனைத்து பொறுப்புவாய்ந்தவர்களின் கடமையும் கூட எனக்கூறியவனாக கங்காணியார்க் குளக்கட்டில் இருந்து தாந்தாமலை நோக்கி தனது பயணத்தினை ஆரம்பித்தான் அழகுதுரை.

**படுவான் பாலகன்**

## ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்கத்தினரது 56ஆவது கதிர்காமப் பாதயாத்திரை



மேற்படி பாதயாத்திரிகர் சங்கத்தினரின் கதிர்காம முருகனை நோக்கிய பாதயாத்திரையானது இவ்வருடமும் தொடரப்படவுள்ளது. இவ்வருடத்துடன் 56 ஆவது அகவையைப் பூர்த்திசெய்யும் 'ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரைச் சங்கத்தினரது' இத் தொடர் யாத்திரை நிகழ்வானது எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி இச்சங்கத்தின் தலைவரும், குருசுவாமியாகவுமுள்ள திரு விஜயசிங்கம் (அப்பாஜீ) அவர்களது தலைமையில் ஆரம்பிக்கப்படுகின்றது.

யாத்திரை முதலாம் நாள் திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலயத்திலுள்ள சடையப்ப சுவாமிகளது சமாதி வணக்கத்திற்குப்பின் "யாத்திரை வேல்" எழுந்தருள்விக்கப்பட்டு, யாத்திரீகர் கூட்டத்தினருடன் அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையும்.

வேலவருடன் அன்று இரவு ஆலய முன்றலில் தங்கியிருக்கும் அடியார்கள் 21ஆம் திகதி அதிகாலையில் குரு சுவாமி அப்பாஜீ அவர்களால் யாத்திரை மாலை அணிவிக்கப்பட்டு, அன்று காலை திருக்கோயில் ஸ்ரீ முருகன் ஆலயத்தை நோக்கி வாகனங்களில் பயணிப்பார்கள். அன்றைய தினம் பிற்பகல் வேளையில் முருகன் ஆலய முன்றலில் 'ஷேத்திராடனம்' என்னும் பெயரில் அமைந்த யாத்திரை மலர் வெளியீடு ஒன்று குருசுவாமியின் தலைமையில் இடம்பெறும்.

திருக்கோயில் முருகன் ஆலயத்திலிருந்து 22ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலையில் அடியார்கள் பாதயாத்திரையை ஆரம்பித்து, 26ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தைச் சென்றடைவர்.

27ஆம் திகதி வியாழனன்று கந்தவேளின் கடம்ப வனத்துள் அடியெடுத்து நடைதொடங்கும் யாத்திதிரீகர்கள் ஜூலை மாதம் மூன்றாம் திகதி புதன்கிழமை காலை கதிர்காமப் பதியைச் சென்றடைவார்கள்.

தகவல் - சிரவி

அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் -
ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் -
ரூபா 200 மாத்திரமே

# விளையாட்டு

## கிரிக்கட் கிராமத்தின் இரண்டாம் கட்டப் பணிகள்





ஜெயா

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் அமைக்கப்பட்டுவரும் புற்தரையிலான கிரிக்கெட் மைதானத்தின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அதற்கான தொடக்க நிகழ்வில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், 'மட்டக்களப்பின் உயிர் நாடியாக இம்மைதானம் திகழும்' என்று விபரித்திருந்தார்.

கிழக்கிலங்கையில் முதல் தடவையாக உருவாக்கப்பட்டுவரும் புற்தரையிலான முதல்தர கிரிக்கெட் மைதானத்திற்கான





இரண்டாம் கட்டப்பணிகளுக்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வுகள் 12.06.2019 அன்று கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் இ.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவான், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எம்.தயாபரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் இம்மைதானம் இனிவரும் காலங்களில் மட்டக்களப்பின் உயிர்நாடியாக திகழும் என்றும் மாவட்ட அலுவலகம் மிக விரைவில் பூர்த்தியடையவுள்ளதாகவும் இம்மைதானத்தை சுற்றியே 6 பிரிவுகளாக வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும கூறினார்.

இதன்போது உரையாற்றிய மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவான் தனதுரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளை செய்து மற்றைய கழகங்களுக்கு ஒரு முன்மாதிரியாக



கோட்டைமுனை விளையாட்டு கிராமமும் கோட்டைமுனை விளையாட்டு கழகமும் திகழ்வதாக குறிப்பிட்டார்.

விளையாட்டை மட்டும் கருத்தில் கொள்ளாது சமூக மேம்பாட்டையும் இக்கழகம் கொண்டு செல்வதை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மண்முனைவடக்கு பிரதேச செயலாளர் எம். தயாபரன் தனதுரையில், அரசாங்கத்தால் செய்யமுடியாத பாரிய வேலைத்திட்டத்தை கோட்டைமுனை விளையாட்டு கிராமமும் கோட்டைமுனை விளையாட்டு கழகமும் செய்துவருவதை பாராட்டியே ஆக வேண்டும் எனவும் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர் இதற்கான பாரிய பங்களிப்பை செய்துவருகின்றனர், விளையாட்டை மட்டும் கருத்தில் கொள்ளாது தம்மை ஒரு சமூக பணியாளர்கள் என்பதை இவர்கள் இனம் காட்டியது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் கட்டிடத்திற்கான மாதிரி புகைப்படமும் திரை நீக்கம் செய்யப்பட்டது. மைதானத்திற்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்குரிய 15 பயனாளிகளுக்கு மின்சாரம் பெறுவதற்கான காசோலையும் வழங்கப்பட்டதுடன் பிரதேச செயலக மட்டத்தில் தமது சிறந்த செயற்பாட்டை வெளிக்கொணர்ந்த கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் வீரர்களும் கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்க செயலாளர் சி.காந்தன் பாடசாலை அதிபர்கள், கோட்டைமுனை விளையாட்டு கிராம அங்கத்தவர்கள் கோட்டைமுனை விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர் .

## கிரிக்கட் உலகக் கிண்ண வரலாறு

கிரிக்கட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் கடந்த மே மாதம் 30-ம் திகதி ஆரம்பமானது. இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மைதானங்களில் நடைபெற்றுவரும் இத்தொடரில் பத்து அணிகள் பங்கு பற்றுகின்றன. தொடர்ச்சியாக 45 நாட்கள் 48 போட்டிகள் என இடம்பெறுகின்ற இத் தொடர் உலக கிரிக்கட் ரசிகர்களுக்கு பெறும் விருந்தாக காணப்படுகின்றது. கடந்த இரு வாரங்களாக இடம்பெற்று வரும் இத் தொடரில் இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் முடிவு விபரங்கள் மற்றும் போட்டி அட்டவனை விபரங்கள்.

யாசின் அரபாத்

போட்டி அட்டவனை

| | | |
|---|---|---|
| 1. | 30 மே | இங்கிலாந்து – தென்னாபிரிக்கா |
| 2. | 31 மே | மேற்கிந்திய தீவுகள; - பாகிஸ்தான் |
| 3. | 1 ஜுன் | நியூசிலாந்து-இலங்கை |
| 4. | 1 ஜுன் | ஆப்கானிஸ்தான் - ஆஸ்திரேலியா (பகலிரவு) |
| 5. | 2 ஜுன் | தென்னாபிரிக்கா– பங்களாதேஸ் |
| 6. | 3 ஜுன் | இங்கிலாந்து – பாகிஸ்தன் |
| 7. | 4 ஜுன் | ஆப்கானிஸ்தான் – இலங்கை |
| 8. | 5 ஜுன் | தென்னாபிரிக்கா– இந்தியா |
| 9. | 5 ஜுன் | பங்களாதேஸ் - நியூசிலாந்து (பகலிரவு) |
| 10 | 6 ஜுன் | ஆஸ்திரேலியா - மேற்கிந்திய தீவுகள |
| 11. | 7 ஜுன் | பாகிஸ்தான் – இலங்கை |
| 12. | 8 ஜுன் | இங்கிலாந்து - பங்களாதேஸ் |
| 13. | 8 ஜுன் | ஆப்கானிஸ்தான் -நியூசிலாந்து (பகலிரவு) |
| 14. | 9 ஜுன் | இந்தியா - ஆஸ்திரேலியா |
| 15. | 10 ஜுன் | தென்னாபிரிக்கா– மேற்கிந்திய தீவுகள் |
| 16. | 11 ஜுன் | பங்களாதேஸ் - இலங்கை |
| 17. | 12 ஜுன் | ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் |
| 18. | 13 ஜுன் | இந்தியா - நியூசிலாந் து |
| 19. | 14 ஜுன் | இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள |
| 20. | 15 ஜுன் | இலங்கை – ஆஸ்திரேலியா |
| 21. | 15 ஜுன் | தென்னாபிரிக்கா- ஆப்கானிஸ்தான் (பகலிரவு) |
| 22. | 16 ஜுன் | இந்தியா - பாகிஸ்தான் |
| 23. | 17 ஜுன் | மேற்கிந்திய தீவுகள் - பங்களாதேஸ் |
| 24. | 18 ஜுன் | இங்கிலாந்து – ஆப்கானிஸ்தான் |
| 25. | 19 ஜுன் | நியூசிலாந்து - தென்னாபிரிக்கா |
| 26. | 20 ஜுன் | ஆஸ்திரேலியா- பங்களாதேஸ் |
| 27. | 21 ஜுன் | இங்கிலாந்து – இலங்கை |
| 28. | 22 ஜுன் | இந்தியா - ஆப்கானிஸ்தான் |
| 29. | 22 ஜுன் | மேற்கிந்திய தீவுகள் - நியூசிலாந்து (பகலிரவு) |
| 30. | 23 ஜுன் | பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா |
| 31. | 24 ஜுன் | பங்களாதேஸ் - ஆகானிஸ்தான் |
| 32. | 25 ஜுன் | இங்கிலாந்து – ஆஸ்திரேலியா |
| 33. | 26 ஜுன் | நியூசிலாந்து - பாகிஸ்தான் |
| 34. | 27 ஜுன் | மேற்கிந்திய தீவுகள் - இந்தியா |
| 35. | 28 ஜுன் | இலங்கை- தென்னாபிரிக்கா |
| 36. | 29 ஜுன் | பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் |
| 37. | 29 ஜுன் | நியூசிலாந்து - ஆஸ்திரேலியா (பகலிரவு) |
| 38. | 30 ஜுன் | இங்கிலாந்து - இந்தியா |
| 39. | 1 ஜுலை | இலங்கை- மேற்கிந்திய தீவுகள் |
| 40. | 2 ஜுலை | பங்களாதேஸ் – இந்தியா |
| 41. | 3 ஜுலை | இங்கிலாந்து – நியூசிலாந்து |
| 42. | 4 ஜுலை | ஆப்கானிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் |
| 43. | 5 ஜுலை | பாகிஸ்தான் - பங்களாதேஸ் (பகலிரவு) |
| 44. | 6 ஜுலை | இலங்கை – இந்தியா |
| 45. | 6 ஜுலை | ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா (பகலிரவு) |
| 46. | 9 ஜுலை | முதல் அரையிறுதி |
| | 10 ஜுலை | முதல் அரையிறுதி , மேலதிக நாள் |
| 47. | 11 ஜுலை | இரண்டாவது அரையிறுதி |
| | 12 ஜுலை | இரண்டாவது அரையிறுதி மேலதிக நாள் |
| 48. | 14 ஜுலை | இறுதிப் போட்டி |
| | 15 ஜுலை | இறுதிப் போட்டி இ மேலதிக நாள் |



பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# எஸ்பொ என்ற எஸ்.பொன்னுத்துரை என்ற மனிதன்

## மட்டக்களப்பை புகுந்த வீடாகக் கொண்ட ஒரு எழுத்தாளர் பற்றி...



யாழ் நிலத்துப்பாணன், எழுத்துலகின் கலகக்காரன், நற்போக்கு இலக்கிய முகாமின் வீரதுரந்தரன் - எஸ்பொவின் 87 ஆவது பிறந்தினம் கடந்தவாரம். ஈழத்து இலக்கிய வீச்சுக்கென தனிச்சவுக்கொன்றைச் செய்து அதன் இனிய வலிகளை தனது எழுத்தெங்கும் தழும்புகளாக பதித்து சென்றுவிட்ட ஆளுமை. இயல்புவாத படைப்பாளுமைகளுக்கான தனியான திமிரை இலக்கிய உலகுக்கு இடித்துக்கூறிவிட்டுப்போன எழுத்தூழியன்.

எஸ்பொவின் படைப்புக்கள் பேசப்படும்போதெல்லாம் அவரது எழுத்துக்களை இந்திரியமானவை என்றொரு குவளையில் போட்டுவைத்துக்கொண்டு கவனப்படுத்துவதும் அதன் ஊடாக அவருடைய வியாபித்த எழுத்தாளுமையை ஒரு குறுகிய - நீக்கலின் - வழியாக பார்க்கத்துணிவதும் எஸ்பொவினை விதந்துரைப்பவர்களுக்கே பழக்கப்பட்டுப்போனதொரு விடயம். அந்தக்குவளைக்குள் எஸ்பொவின் பிற்காலத்து அரசியல் நிலைப்பாடுகளையும் ஊற்றி நீர்த்துப்போகச்செய்வதும் இன்னும் பலரது விருப்பத்துக்குரிய விமர்சன ஒழுங்குகள். இது குறிப்பாக தறுக்கணித்துக்கிடக்கும் இலக்கிய வட்டங்களில் மிக அதிகம்.

எஸ்பொவின் எழுத்துலகம் இந்திரிய எழுத்தக்களால் நிறைந்ததுதான் என்று முன்னிலைப்படுத்துவதற்கு பலராலும் முன்வைக்கப்படுகின்ற படைப்பு அவரது "சடங்கு". நாற்பது வருடங்களுக்கு முன்னர் ஒரு குடும்பப்பெண் சுய இன்பம் காண்பதை தனது எழுத்துக்களில் வைத்தவர் என்றும் பிள்ளைகளினால் செறிந்துபோயிருக்கும் குடும்பமொன்றில் தம்பதியினர் கலவிகொள்வதற்கு திருகுப்படுகின்ற பாடுகளையும் எழுதியவர் என்றும் "சடங்கு" தொடர்பில் இன்றுவரைக்கும் பல சேறடிப்புக்கள் நோகடிப்புக்கள் உள்ளன. மறுபக்கத்தில், "அந்தக்காலத்திலேயே அவர் அவற்றையெல்லாம் எழுதினாரே" - என்று வியப்பதின் ஊடாக அந்தப்புள்ளிகளை மாத்திரம் வேறு திசையில் சொல்லிக்காட்டுபவர்களும் பலர்.

ஆனால், சடங்கில் செல்லபாக்கியம் ஆச்சி வழியாக எஸ்பொ உருவாக்கியிருக்கும் பெண் ஆளுமைச் செறிவின் அளவுக்கு நாற்பது வருடங்களாகியும் இன்றுவரைக்கும் ஒரு பாத்திரம் அந்த மண்ணிலிருந்து அல்லது அந்த மண்ணைச்சார்ந்து உருவாக்கப்படவில்லை என்று அடித்துச்சொல்வேன். "சடங்கு" வாசிப்பின்போது செல்லபாக்கியம் ஆச்சி எம்மைப்பின் தொடருகின்ற ஆக்ரோஷமானதொரு நிழல். ஆனால், சடங்கின் முடிவில் அவள்தான் எமக்குள் வாழும் மிகப்பெரிய நிஜம். யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களின் வகிபாகம் குறித்த நுண்பார்வையுடன் வடித்தெடுக்கப்பட்டவள் செல்லபாக்கியம் ஆச்சி. அவளது ஒற்றைப்பார்வை முதற்கொண்டு ஒழுங்கை நடை வரைக்கும் அத்தனையும் யாழ்ப்பாணத்தின் பெண் தலைமைத்துவ பண்பாட்டுக்கூறு பற்றி அப்பட்டமாக அவிழ்த்துவைக்கிறது.

பெரும்போர் முகிழ்ந்த பிற்கால கட்டங்களில் யாழ்ப்பாணம் உட்பட வட நிலத்திலிருந்து எத்தனையோ பெண் ஆளுமைகள் வரலாற்றில் தங்களது வகிபாகத்தினை வரைந்து சென்றிருந்தாலும்

ப. தெய்வீகன்

இவற்றுக்கெல்லாம் முன்பே எஸ்பொ பன்முகப்பார்வைகொண்ட பேராளுமையை செல்லபாக்கியம் ஆச்சியின் வழியாக எங்களின் முன்பாக கொண்டு வந்து காண்பிக்கிறார்.

குலைந்துபோன குடும்பமொன்றில் படித்திருக்கும் செந்தில்நாதனை எல்லோரும் வெறுத்து ஒதுக்கிப்போகும்போதும் அவனை தனது அறிவுக்கண்கொண்டு தூரநோக்கத்தோடு தனது மகளுக்கு கட்டிக்கொடுக்கிறாள் செல்லபாக்கியம் ஆச்சி. எழுபதுகளின் தமிழ் சமூக அமைப்பு முறையில் ஒரு பெண் எப்பேற்பட்ட தீவிர முடிவை லாவகமாக கையிலெடுக்கிறாள் என்று காண்பிக்கத்தொடங்கும் எஸ்பொவின் கதை கமரா, அதன் பின்னர் செல்லபாக்கியம் ஆச்சியின் வழியாகவே நாவல் முழுவதும் ஒளி பாய்ச்சுகிறது. மருமகன் செந்தில்நாதன் குடும்பத்தலைவன்தான் என்றாலும் அவனுக்கான முடிவெடுக்கும் மூளையாக செல்லபாக்கியமே அவனின் அனைத்து செல்களிலும் நொதித்துக்கிடக்கிறாள். அவன் கொழும்பிலிருந்து விடுமுறைக்காக வீட்டுக்கு வந்தால் அவன் என்னென்ன செய்யவேண்டும், என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பவற்றை உணர்த்தும் அசரீரியாக செல்லபாக்கியம் செந்தில்நாதனுக்குள் இருக்கிறாள். ஒரு குடும்பமாக தன் மகளையும் குழந்தைகளையும் கைபிடித்துக்கொண்டு எங்கெங்கு போகவேண்டும். எவ்வளது தூரத்துக்கு போகவேண்டும் என்பதை வழிகாட்டுவதற்கும் செந்தில்நாதனுக்குள் ஒரு ஆவிபோல இயங்குகிறாள். ஆனால், மருமகனை அவள் முற்றுமுழுதாக தனது கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கவில்லை. அவர் ஊருக்கு வருகின்றபோது கள்ளும் குடிப்பார். சீட்டுமாடுவார். இப்படியெல்லாம் கிழவியால் நீளக்கயிற்றில் மேய விட்டப்பட்ட மாடுபோல குடும்பத்துடனேயே அவர் லயித்திருப்பார்.

ஏனைய பாத்திரங்களை மாத்திரம் இயக்குபவளாக இல்லாமல் தன்னளவிலும் ஒரு இயந்திரமாகவே செல்லபாக்கியத்தை எஸ்பொ உருவாக்கியிருப்பார். செல்லபாக்கியம் ஆச்சியின் உடல் நாவலில் ஒருபோதும் ஓய்ந்திருக்காது. நித்திரைக்குப்போன பின்னரும் அவளது மூளை சிந்தித்தபடியிருக்கும். மகள் - மருமகள் தாண்டி பேரப்பிள்ளைகளை சுற்றி வட்டமிட்டபடியிருக்கும். அவளது முடிவுகள்தான் குடும்பமெங்கும் நிறைந்திருக்கும். இன்னும் இறுக்கமாக சொல்லப்போனால், மகளும் மருமகனும் கலவி கொள்வதுகூட ஆச்சியின் முடிவில்தான் தங்கியிருக்கும்.

இதுதான் யதார்த்தம். பெண் என்பவள் சமூக கட்டமைப்புக்குள் - ஒரு கட்டத்துக்கு பிறகு - அல்லது துணிச்சலாக தன்னை கொண்டுநடத்துகின்றபோது - எவ்வளவுதூரம் முடிவெடுக்கும் - அதிகார தரப்பாக மறைமுகமாக நிறைந்திருக்கிறாள் என்பதையும் அது யாழ் சமூகக்கட்டமைப்பில் எவ்வளவு யதார்த்தபூர்வமானது என்பதையும் செல்லபாக்கியம் ஆச்சியின் வழி எஸ்பொ வரைந்திருப்பார். ஆச்சியின் மகளிலும் அது சாதுவாக படரத்தொடங்கியிருப்பதை லேசாக காண்பித்திருப்பார்.

சமகாலப் படைப்புக்களில் ஒரு பெண் பாத்திரத்தை மனதில் ஒட்டவைப்பதற்கு எவ்வளவோ கரணங்கள் எல்லாம் அடிக்கவேண்டியுள்ள நிலையில், எஸ்பொவின் செல்லபாக்கியம் ஆச்சி ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் என்றைக்கும் அழியாத தனிப்பெரும் கிழவி. சடங்கில் அவளைப்படிப்பதும் யாழ்ப்பாண சமூகத்தின் கலப்படமற்ற பெண் ஆளுமைகளின் மேன்மைகளை படிப்பதும் ஒன்றுதான். தாபத்தில் கிடந்துழலும் தம்பதியினரை வழிநெடுகக்காட்டிவிட்டு, நாவலின் முடிவில் அது வெறும்புள்ளிதானே ஒழிய இன்னும் பல ஆண்டுகளுக்கு பேசப்படவுள்ள வரலாறு வேறொன்று என படைக்கப்பட்டவள் செல்லபாக்கியம்.

பிறந்தநாள் வாழ்த்துக்கள் எஸ்போ.

தொடர்ச்சி... (பக்கம் -15)

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 07

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

**பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடும்ப தரிசன ஆறுதல் வழங்களின் அனுபவங்கள்**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு கீழ் இயங்கும் உளசமுக கழகத்திலிருந்து உளநல வைத்தியரான நானும் உளவள ஆற்றுப்படுத்துகை உத்தியோகத்தர்கள் இருவருமாக சேர்ந்து குழுக்களாக சென்று ஆதரவு அளிக்கும் களப்பணியில் ஈடுபட்டோம். நாங்கள் சென்ற பல வீடுகளின் தரிசனத்தில் பலர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவற்றில் ஒரு குடும்பத்தில் பத்து வயது குழந்தையை இழந்திருந்தார்கள். மற்றையவர்கள் உடல், உள பாதிப்புக்களுக்குள்ளாகி இருந்தார்கள். பாதிப்பிற்குட்பட்டவர்கள் குறித்த ஒரு சமய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதால் சமய குருவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, அவர்களின் குடும்ப தரிசனத்திற்கு சென்றோம். அங்கிருந்தவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்களுடன் உரையாடினோம்.

அவர்கள் கதைக்கும் விடையங்களை பொறுமையுடன் செவிமடுத்தோம். அவர்களுடைய உணர்வுகளை வார்த்தைகளாகவும், அழுகையாகவும் எங்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். நடந்த சம்பவத்தை சொல்லும்போது அதிக பயத்துடன் தயங்கி, தயங்கி பேசினார்கள். மகனை இழந்த குடும்பத்தாய் இறப்பை ஏற்றுக்கொண்டாலும், கடந்தகால மகனின் நினைவுகளை அடிக்கடி மீழ்ச்செய்து சொல்லிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு குடும்ப உறுப்பினருடனும் உரையாடினோம். அவர்களுடன் நிறைய விடயங்களில் ஆமோதித்துப்போனோம். அவர்களுடைய ஆதங்கத்திற்கு எதிர்மறையாக நாங்கள் கதைக்கவில்லை. நடந்த சம்பவத்திற்கான நியாய, அநியாயங்களைப்பற்றி வாதிடவில்லை. அவர்களுக்கான உடல், உள உதவிகளை கொடுக்கும் குடும்ப உறவினர்களை அடையாளம் கண்டோம். அவர்களுக்கு குடும்ப உறவினர்கள் எவ்வாறு உதவலாம் என ஊக்கப்படுத்தினோம்.

முக்கியமாக அவர்களது நித்திரை, உணவில் விருப்பம், நாளாந்த செயற்பாடுகளில் வழமைபோல் ஈடுபடுகிறார்களா? என்ற விடையங்களை அறிந்து கொண்டோம். அவர்களின் தற்போதைய வாழ்க்கையின் முக்கியத்துவமும், தற்கொலை முயற்சிக்கான செயற்பாடுகளோ? எண்ணங்களோ உள்ளதா? என படிப்படியாக அறிந்து கொண்டோம். உடல், உள உபாதைகளுடன் இருந்த பெரும்பாலானவர்கள், முதல் வார நிலமையைவிட இரண்டாம் வாரம் வழமைக்கு திரும்பியவர்களாக காணப்பட்டார்கள். ஆயினும் நித்திரைக்குறைவு, வெளியில் செல்வதற்கான பயம், சம்பவத்தை மீள நினைத்துப் பார்த்தல் என்பன அவர்களுக்கு கடினமாக இருந்தது.

மிக முக்கியமாக சிறுவர்கள் மிகப் பயத்துடன் காணப்பட்டனர். அவர்களுடன் வயதிற்கேற்ப மிக மென்மையான அணுகுமுறையில் நல்ல உறவை ஏற்படுத்தி உரையாடினோம். சிறிய சில செயற்பாடுகளை செய்ய ஆலோசனை வழங்கினோம். ஆயினும் அவர்களுக்கு நீண்ட தூர கண்காணிப்புடன் கூடிய செற்பாடுகள் தேவைப்படுவதாக நாங்கள் உணர்ந்து கொண்டோம். நித்திரை குறைவுடையவர்களுக்கு மாத்திரைகள் குடும்ப தரிசனத்தில் வழங்கினோம். உடல் உபாதை உடையவர்களுக்கு நோய் நிலைக்கேற்ப குறுகிய காலத்திற்க்கு மாத்திரைகள் வழங்கப்பட்டாலும், மேலதிக சிகிச்சைகளுக்கு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். எதிர்காலத்தில் அவர்கள் அனைவரையும் எம்முடைய குழுக்களின் பகுதி, பகுதியான தரிசனம் பற்றி முடிவெடுத்ததுடன், பிள்ளைகளை குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்துதல் பற்றிய எதிர்கால திட்டங்களை உருவாக்கினோம். எமது நீண்டகால, தூர நோக்கு திட்டங்களுடன் அவர்களை எமது குழுக்கள் ஆதரவு அளிக்கும் திட்டங்களை வகுத்துக்கொண்டோம்.

**ஆதரவான குழுக்களை அமைத்தல்**

ஒரே மாதிரியான பிரச்சினைகள் உள்ளவர்கள் (உதாரணமாக கற்பழிப்பு, சித்திரவதை, விதவைகள், குண்டுவெடிப்பால் காயப்பட்டவர்கள்) ஒன்றுகூடி அவரவர்களின் அனுபவங்களைப் பகிர்வதன் மூலம்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியும் இஸ்லாமிய மாணவர்களும்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்: கதை—4)*



1977 என நினைக்கிறேன் சித்திரலேகா(துணைவியார்) யாழ்ப்பணப் பல்கலைக் கழகத்தில் நியமனம் பெற்று, மகனுடன் யாழ் சென்று விட்டார். அப்போது நான் கொழும்பில்பாட நூல் எழுத்தாளராகப் பணி புரிந்து விட்டு கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் படிப்பான கல்வி டிப்ளோமா செய்து கொண்டிருந்தேன். நானும் யாழ்ப்பாணம் வர வேண்டும் என்பது வளாகத் தலைவர் பேரசிரியர் கைலாசபதியின் விருப்பம். மாறுதல்கள் மறுக்கப்பட்டிருந்த அக்காலகட்டத்தில் எனக்கான இட மாறுதலை அவர் செய்து தந்தார். எனக்கு யாழ்ப்பாணத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. என் வாழ்வின் புதுத் திசை திறக்கப்பட்டது.

B.A Hons,M.A, PG Dip.in.Ed போன்ற பட்டங்களை வைத்திருந்தும் ஆசிரியர்கள் நிறைந்திருந்தமையினால் எனக்கு யாழ்ப்பாணத்தின் எந்தப்பாடசாலையிலும் இடம் எடுக்க முடியவில்லை. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி என்னை எற்றுக்கொண்டது. இது யாழ்ப்பணப் பட்டினத்தில் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்திருந்தது. அங்கு காமிம் என்பவர் அதிபராக இருந்தார், அவரது தம்பி மஹ்ரூப் என்னுடன் பேரதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு சாலை மாணாக்கர். காமிமின் மைத்துனர் மக்பூல் பின்னாளில் மன்னார் அரசாங்க அதிபர். எனக்கு பேராதனைப் பல்கலைக் கழ்கத்தில் சீனியர், இவர்களின் சிபார்சினால் எனக்கு ஒஸ்மனியாக் கல்லூரியில் காமிம் இடம் தந்தார். யாழ்ப்பாணத்தில் காலூன்ற இடம் கிடைத்தது.

ஒஸ்மானியாக் கல்லூரி வாழ்க்கை அற்புதமானது. அங்குதான் சிவரமணியின் தந்தையார் சிவானந்தன் பி.எஸ்ஸி பட்டதாரி கற்பித்துக் கொண்டிருந்தார். தமிழ் ஆசிரியர்களும் இஸ்லாமிய ஆசிரியர்களும் சிங்கள ஆசிரியர்களும் அங்கு கற்பித்தனர். நான் சென்ற பின்னர் காமிம் உயர்தர கலை வகுப்பினை ஆரம்பித்தார். நான் தமிழும் வரலாறும் அரசியலும் கற்பித்தேன்.

பாடசாலைகளில் எங்கு போனாலும் 6ஆம் வகுப்பு ஒன்றைக் கேட்டு வாங்கிக் கொள்வேன். என்னை வினோதமாகப் பார்த்தபடி 6ஆம் வகுப்பை என்னிடம் ஒப்படைத்தார் காமிம்... அதற்கு வகுப்பாசிரியராகப் போடும் படியும் கேட்டுக்கொண்டேன். இன்னும் வியப்போடு பார்த்தபடி மகிழ்ச்சியோடு அனுமதித்தார் அதிபர்.. 11 வயதுப் பாலகர்கள் கள்ளம் கபடம் அறியார்..எளிமையான மனங்கள்.. அவர்களின் பெயர்கள் மறந்து விட்டன. காசிம் ரகீம், அமனுல்லா ஆகியவர்களின் செயல்களும் முகங்களும் மனதில் நிற்கின்றன.. இஸ்லாமிய அசிரியர்களான கம்தூன், ரஸாக், அப்துல்கறீம் ஆகியோர் ஞாபகம் வருகின்றனர். ரஸாக் ஒரு முறை வட்டிலப்பம் செய்து எடுத்துக்கொண்டு மனைவி சகிதம் என் வீட்டுக்கு வந்து விட்டார், அப்போது நான் ஆத்திசூடி வீதியில் எதிர்ப் பக்கதிலிருந்த பெரிய வீட்டில் இருந்தேன். இந்தப் பிள்ளைகளின் தாய் தந்தையர் ஒஸ்மானியாவை அண்டிய முஸ்லிம் வட்டாரத்திலும், யாழ்ப்பாணப் பட்டணத்திலும் வாழ்ந்தனர். மாணவர்கள் வீடு செல்வதும், அவர்கள் சூழல் அறிதலும், பெற்றோர்களைப் பார்ப்பதும் பேசுவதும் எனது வழமை.

மட்டக்களப்புக் கல்முனை சாகிராக் கல்லூரியில், உவெஸ்லிக் கல்லூரியில், வந்தாறுமூலை மத்திய கல்லூரியில், கொழும்புகொம்பனித் தெரு பாடசாலையில் கற்பித்த காலங்களில் இவ்வழக்கத்தை நான் வைத்திருந்தேன். பிள்ளைகளின் சூழலை அறிந்து கொள்வதில் நான் பெரிதும் அக்கறை காட்டினேன். மாணவர்களும் என்னோடு பெரும் அன்பாக இருந்தார்கள். பாடசாலையில் நாடகங்கள், கூட்டங்கள், கையெழுத்துப் பத்திரிகை என்பன ஆரம்பிக்கப்பட்டன. உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பலரின் பெயர்கள் மறந்து விட்டன. முகங்கள் ஞாபகத்திலுள்ளன. ஆயிசா, அவ்வா உம்மா, அப்துல்லா ஆகியோர் ஞாபகம் வருகிறார்கள். அவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் எடுத்தேன்.

அப்போது பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாஸ, அவர் ஒஸ்மானியக் கல்லூரி வருவதியிட்டு ஒரு நாடகம் தயாரிக்குமாறு அதிபர் கேட்டுக்கொண்டார். இந்த நாடு மூன்று இனங்களுக்கும் சொந்தம் என்ற பொருளில் ஆடலும் அசைவும் கொண்ட ஒரு நாடகம் தயாரித்தேன். அதில் பங்கு




கொண்டோர் இந்த 6ஆம் 7ஆம் வகுப்பு மாணவர்களே. தமிழிலும் சிங்களத்திலும் அவர்கள் பாடுவார்கள். சிங்களத்திற்கு அங்கு உடற்பயிற்சி ஆசிரியராகக் கடமைபுரிந்த சிங்கள் ஆசிரியர் உதவினார். அவர் லங்கா சமசமாஜக் கட்சி புரட்சிகரப் பிரிவைச் சேர்ந்தவர். பிரேமதாஸ அதனை பார்த்துப் பாராட்டிப் பேசினார். அம்மாணவர்களின் பெற்றோர்கள் என்னுடன் நெருக்கமானர்கள். நல்ல கறி ஆக்கினால் 7ஆம் வகுப்பில் பயின்ற மாணவனான றகீம் எனக்குக் கொண்டுவந்து விடுவான். அக்கறி வெகு சுவையாக இருக்கும். ரம்சான் வந்தால் எனது வீட்டின் குளிர்சாதனப்பெட்டி பலகாரங்களாலும் இனிப்புகளாலும் வட்டிலப்பங்களினாலும் நிறைந்த வழியும். அற்புதமான பிள்ளைகள் அற்புதமான பெற்றோர்.

இக்காலகட்டத்தில்தான் யாழ் பகலைக்கழக தலைவர் பேரா.கைலாசபதி பல்கலைக் கழக மாணவர்களுக்கு நாடகம் தயாரிக்கும்படி என்னை வேண்டிக்கொண்டார்.

அதன் விளைவாகவே போர்க்களம், புதியதொருவீடு என்பன தயாரித்தேன்.

இப்புகழ் காரணமாக என்னைத் தமிழ் பாடசாலைகள் விரும்பின. கோண்டவில் மஹாவித்தியாலயத்திலும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலும் உயர்தர வகுப்புக்குத் தமிழ் கற்பிக்க முடியும் வாருங்கள் அதிபர்கள் விரும்புகிறார்கள் என அழைத்தார் சொக்கன் மாஸ்டர்.

ஒஸ்மானியாவின் அன்பைப் புறம் தள்ளி என்னால் புறப்பட முடியவில்லை எனக்கு யாழ்ப்பாணத்தில் காலூன்ற இடம்தந்த ஒஸ்மானியாக் கல்லூரி என்னைப் 'போ' என்று சொன்னலொழிய நான் வேறு எங்கும் வரமாட்டென் என மறுத்துவிட்டேன். அந்த இஸ்லாமிய மாணவர்களின், பெற்றொர்களின் ஆசிரியர்களின் அன்புக்கு நான் கட்டுப்பட்டேன். எனது நாடக முயற்சிகளுக்கு அவர்கள் நன்கு உதவினர்.

பலாலி அரசினர் பயிற்சிக்கலாசலையில் எனக்கு விரிவுரையாளர் நியமனம் கிடைத்த பின்னரே 1980களில் நான் ஒஸ்மானியாக் கல்லூரியை விட்டுப் புறப்பட்டேன். அதன் பின்னரும் அவர்களுடன் தொடர்பிருந்தது.

இடதுசாரி நண்பர்களான் சுபைர் இளங்கீரன், இக்பால் போன்றவர்களும் அங்கு குடியிருந்தனர். இவ்வண்ணம் உணர்ச்சிகரமான தொடர்பிருந்த ஒஸ்மானியாக் கல்லூரியை நான் பார்க்க விரும்பினேன்.

ஆரம்பத்தில் ஒரு றலி சைக்கிள் வைத்திருந்தேன், திருநெல்வேலியிலிருந்து காலையில் புறப்பட்டு அதில்தான் ஒஸ்மானியா செல்வேன். பின்னர் ஒரு ஸ்கூட்டர் வாங்கினேன் அதில் செல்ல ஆரம்பித்தேன்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றபோது மாணவி சஹிதாவையும் கூட்டிகொண்டு ஒஸ்மானியா சென்றேன். செல்லும்போது கூட வந்த மாணவி சகிதாவிடம் இதையெல்லாம் கூறிக்கொண்டே வந்தேன். அவளுக்கும் அப்பாடசாலையைக் காண்பதில் ஆர்வம்.

பாடசாலை புனருத்தாரணம் பெற்றிருந்தது. கேற் பூட்டியிருந்தது பழைய ஞாபகங்கள் வந்தன. ஒஸ்மனியக் கல்லூரிக்கதவைத் திறந்தபடி சைக்கிளிலும், ஸ்கூடரிலும் அதற்குள் நுழைந்தமை ஞாபகம் வந்தது. அதற்குள் 40 அருடங்களுக்கு முன்னர் கேட்ட ஒலிகள் காதில் கேட்பது போல இருந்து. பாடசாலையின் மேல் தளத்திலிருந்த பெரிய மண்டபத்துள் நாடகம் நடக்கும் சந்தடி கேட்டது. ஒஸ்மானியா உயிர்பெற்றது போல. 40 வருடங்களுக்கு முன்னர் நான் அங்கு நிற்பதுபோல ஓர் உணர்வுக்குள் அகப்பட்டேன். ஒரே ஒரு கணம்தான் அந்த உணர்வு'. எதிரே இடிந்து தகர்ந்துபோய் இன்னும் புதுப்பிக்காமல் கிடந்த வீடுகள் என்னை நிஜ உலகுக்குள் இழுத்து வந்தன. ஒரு பெருமூச்சோடு ஓட்டோவுக்குள் ஏறிக்கொண்டேன். என் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட சகிதா ஒன்றும் பேசவில்லை.

---

# "சேட்டைக் கழட்டுங்க முதல்!" அறியாமையின் ஆணவக்குரல் --02

## (கோயிலில் சேட்டைக் கழற்றுவது அவசியமா?)

**வி.துலாஞ்சனன்**

**கோவில்களில் ஆண்கள் மேலாடையைக் கழற்றுவதில் இன்னும் பல நடைமுறை விபரீதங்களும் இருக்கின்றன. இந்தக்காலத்தில் நூற்றுக்கு தொண்ணூறுவீதமானவர்கள்வாளிப் பானஉடல் கொண்டவர்கள் அல்ல. தின்றும் குடித்தும்வண்டியும் வயிறுமாக அலையும் ஆணழகர்கள்தான்அதிகம். கணினியுகத்தின் லீலை! அவர்களால் எப்படி மகிழ்ச்சியாக கோவிலுக்குள் உலவமுடியும். வாகனம்காவும்போது முன்னேதூக்குபவனின் முதுகில்வயிறுஇடிக்கும். கோவிலை வளைக்கும் போது திரும்பினால் மண்டபத் தூணில்வயிறு முட்டிக் கொள்ளும். வண்டி கொண்டிருப்பவனின் வேதனை மிகக் கொடியது.**

**அவர்களுக்கு இந்தப் பீதி என்றால், ஒட்டி உலர்ந்த எலும்புக்கூடாய் நடக்கும் ஒருவனுக்கு அருகில் வாளிப்பாக குலுக்கித் தளுக்கி நடக்கும் தன் நண்பனைப் பார்த்து பொறாமையும் தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டிருக்கும். கோவிலுக்குள்பொறாமைப்படலாமா? அப்படி பொறாமைப்படும்வாய்ப்பைநாம்ஏற்படுத்தலாமா? இந்தத்தொந்தியையும்ஓமக்குச்சிகளையுமாவதுசகித்துக்கொள்ளலாம். கன்னங்கரிய மயிர் படர்ந்து கரடி போல எதிரே வரும் ஒருவர், பார்ப்பவரை முகஞ்சுழிக்கவைப்பார். தேமல், படர்தாமரை முதலான தோல் நோய்களுடன் கூனிக்குறுகி போகும் ஒருவரைப் பார்த்தபடி உங்களால்சந்தோசமாகசாமிகும்பிடமுடியுமா?**

**இப்படி எல்லாம் இல்லை, நாங்கள் ஜிம்முக்குப் போகிறோம், நன்குஉடம்பைப்பேணுகிறோம்என்று சத்தம் ஒருபுறம்கேட்கும். உள்ளூர்சூரியாக்கள். அவர்கள்இதுதான்வாய்ப்பு என்று புஜத்தை மடக்கிதோளைஉயர்த்தி நெஞ்சைநிமிர்த்தி, ஐந்தாறு தடவை இளம்பெண்களைச் சுற்றி**



**வந்து, பீதியைக் கிளப்புவார்கள். அவர்களைக் கண்டு நம்மூர்ச மந்தாக்களும்ஜோதிகாக்களும்க வனம்சிதறினால் உங்களுக்குப் பரவாயில்லையா? ஆலயம் என்பது ஆன்மாலயப்படும் இடம் ஆயிற்றே?**

**எல்லாவற்றையும் விட தாங்கமுடியாதது இந்த வியர்வை நாற்றம். கூடிநிற்கும் மக்களின் உடலிலிருந்து வெளியேறும் வெம்மைக்கு நடுவே முன்னும் பின்னும் வியர்த்து வழிய சுவாமி திருவீதி உலா வரும் போது நெருக்குப்பட்டு நடந்தவர்களுக்கு தான் அது புரியும். அதற்குள் சில நவநாகரிக நங்கையர் பூசிவரும் நறுமணங்கள், அழகுசாதன கிரீம்கள் வியர்வையுடன் கலந்து பரவும் மணம் இருக்கிறதே! உவ்வே!**


**வியர்வை நாற்றத்தில் இன்னொரு வகையான கொடுமை இருக்கிறது. கொலைகாரப்பாவி. சாதாரணமாக நம் மூக்குக்கு நேரே அக்குளைக் காட்டி கையைத் தூக்கி அரோகரா போட்டு விட்டுப் போய்விடுவான். நாம் சுயநினைவுக்கு வருவதற்குள் கோவிலில்பூசை முடித்து திரையைப் போட்டிருப்பார்கள். மீண்டும் பிரச்சினைக்கு மிகத்தெளிவாக வருகிறேன். ஆலயங்களில் ஆண்களின் மேலாடையைக் கழற்றச் சொல்வது**

**ஒரு தவறு என்றால், அதைக் கண்ணகியின் கோவிலில் செய்யமுனைவது இன்னொரு மாபெரும் தவறு. சிவன், திருமால் முதலிய பெருந்தெய்வக்கோவில்களில், அவர்கள் தான் பேரரசர்கள், நாம் ஆளப்படும் அடியவர்கள். ஆனால், நாட்டார் மரபில் இருப்பது அந்த உறவல்ல. கண்ணகி கிராமிய மரபுக்குட்பட்ட தெய்வம். அவளுடன் அடியவர்களுக்குஇருப்பது மிக எளிமையான தாய் - பிள்ளை உறவு. வைகாசி மாதம் தோறும் தன் பூட்டப்பிள்ளைகளை - பேரப்பிள்ளைகளை பார்த்துவிட்டுச் செல்ல வருகின்ற மூதன்னை அவள். அவள் முன் சாதாரண பிள்ளைகளாகத்தான் அடியவர்களும் நிற்கிறார்கள், "அம்மாளே" என்கிறார்கள். "தாயாரே" என்கிறார்கள். "அம்மம்மாகூ" என்கிறார்கள். அப்படித்தான்அந்தஉறவும்நீடிக்க**

<u>பகுத்தறிவு சுயமரியாதை இயக்கம்</u>

பகுத்தறிவு பகலவன் என தென்னிந்தியாவில் அறியப்படுபவர் தந்தை பெரியார். ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், எழுச்சியூட்டும் அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் சமூக சீர்திருத்தத்திற்காகவும் மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும் சாதி வேற்றுமைகளை அகற்றுவதற்காகவும் போராடிய மிகப்பெரிய பகுத்தறிவாளர். தமிழகத்தின் திராவிடர் கழகத்தை தோற்றுவித்தவர். பெண் விடுதலைக்காகவும் சாதி மற்றும் பாலின சமத்துவம் போன்ற கொள்கைக்காகவும் போராடிய சமூக சீர்திருத்தத்தின் தந்தை. தென்னிந்தியாவின் சாக்கிரட்டிஸ் என்றும் "பகுத்தறிவுப் பகலவன்" என்றும் போற்றப்பட்ட ஈ.வெ.ராமசாமியின் பெயர் இல்லாமல் பகுத்தறிவு என்ற சொல்லை விளக்குவது கடினமேதான்.

*<u>பெரியார் ஈ.வெ.ராமாசாமி</u>*




இப்பெரியாரின் கொள்கையில் பிடிப்பேற்பட்டு இவரோடிணைந்து செயல்படடவர்கள். அண்ணாதுரை, கருணாநிதி, நெடுஞ்செழியன், வீரமணி, கண்ணதாசன் என பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்களிலும் இக் கொள்கைகளிலும் கவரப்பட்டு மட்டக்களப்பிலும் பகுத்தறிவுச் சிந்தனையை வளர்க்க வேண்டுமென்ற ஈடுபாட்டினால் இராஜதுரை அவர்களால் உருவானதே மட்டக்களப்பு பகுத்தறிவு சுயமரியாதை இயக்கம். இவ்வேளையில் பகுத்தறிவென்றால் என்ன? என்பதை நான் அறிந்ததை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

பகுத்தறிவு என்பது ஒன்றை வைத்து ஒன்றை விளங்கும் நுண்ணறிவாகும். ஒரு பொருளை கண்ணால் பார்த்து நம்புவதைவிட அதன் விளைவுகளை வைத்து நம்புவது பகுத்தறிவின் தன்மையாகும். உதாரணத்திற்கு தூரத்திலிருந்து புகையைக் கண்டு தீவிபத்து என அறிவது போன்றதாகும்.

பார்க்கும்அறிவு, கேட்கும்அறிவு, தொடும்அறிவு, நுகரும்அறிவு, ருசிக்கும்அறிவு போன்ற அறிவுகள் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான தன்மைகளாகும். ஆனால் மற்ற ஐந்தறிவுகளால் பெறப்படும் செய்திகளை ஒருங்கிணைத்து உண்மை நிலையைக் கண்டறிந்து ஆராய்ந்து முடிவெடுப்பது நுண்ணறிவாகும் இதையே பகுத்தறிவு என்று கூறலாம். எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. என்கிறது திருக்குறள். இதன் பொருள் எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் யாதொரு பொருளை யார்யார் சொல்லக் கேட்பினும். அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-06*

இப்படி அறிவுபூர்வமான சிந்தனைக்கு வித்திடும் கொள்கைகளை கடைப்பிடிக்கும் இயக்கமொன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தினை இளைஞர்களிடம் எடுத்துக்கூறி நாம் உருவாக்கும் இவ்வியக்கத்தில் சாதி இனம் போன்ற பாகுபாடே இருக்கக்கூடாது. இவ்வியக்கத்தில் சகல தொழிலாளிகளும் இடம்பெற வேண்டும். என்ற தன் உள்ளக்கிடக்கை எடுத்துக்கூற அதன் பிரதி பலிப்பே இளைஞர்களின் ஒத்துழைப்போடு இராஜதுரையால் ஸ்தாபிக்கப்பட்ட பகுத்தறிவு சுயமரியாதை இயக்கம்.

மட்டக்களப்பில் தாழ்த்தப்பட்ட சமுகத்துக்கு கோயில்களின் அடைக்கப்பட்ட கதவுகள் திறந்து விடப்படவேண்டும், கோயில்களில் உயிர்ப்பலிகள் இடம் பெறுவது தடுக்கப்பட வேண்டும், தொழில்ரீதியாக சாதி பேதம் பார்த்து மனிதர்களை தள்ளி வைக்கக்கூடாது. என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே இந்த இயக்கம் இயங்கத் தொடங்கியது. மட்டக்களப்பில் சுமார் 60ஆண்டுகளுக்கு முன் சாதிவெறி தலை விரித்தாடிய அந்த காலகட்டத்தில் மட்டக்களப்பு மைதானத்தில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பகுத்தறிவுப் பேச்சாளர்கள் திரு.டார்பிடோ ஜனார்த்தனம், திரு.அருப்புக்கோட்டை இராமசாமி ஆகிய பேச்சாளர்கள் உரையாற்றுவதாகவும் இருந்தது. வரவழைக்கப்பட்ட பேச்சாளர்களுக்கு சகல சமூகத்தைச் சேர்ந்த, சலவைத் தொழிலாளி, சவரத்தொழிலாளி, இசை வேளாளர்கள், சீவல்தொழிலாளிகள் ஆகியோரினால் மாலை அணிவிக்க வைத்து ஒரே மேடையில் அமரவைத்து நடத்திய கூட்டம் அன்று பெரும் போராட்டகளமாக மாறியது. சரமாரியான கல்லெறி இடம்பெற்றது. கல்லெறிபடாமல் பேச்சாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டு திருமலைவீதியில் இருந்த "கிங்ஸ் ஹோட்டலில்" பத்திரமாகச் சேர்த்து பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக இராஜதுரை செய்திருந்தார். அதேபோல் மேலும் பல இடங்களில் சாதி பேதமின்றி சமபந்தி சாப்பாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. ஆலயங்களில் ஆடு கோழி பலியிடுவதை நிறுத்த வேண்டுமென்ற போராட்டமும் இந்த சுயமரியாதை இயக்கத்தால் நடந்தது.

இந்நிகழ்வுகள் நடைபெற்ற சமகாலத்தில் மட்டக்களப்பிலிருந்த சில வீதிகளின் பெயர்கள் சாதிகளின் பெயர் கொண்டே அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. அவைகளில் எடுத்துக்காட்டுக்காக சில, பாபர்வீதி, கடையதெரு, வண்ணாரவெட்டை, நளத்தெரு, தட்டாதெரு என்பனவும் அடங்கும். இப்படியாக வீதிகளின் அடையாளத்துக்கு சாதிகளின் பெயர்கள் இருப்பதை

தொடர்ச்சி... (பக்கம் -15)

# புன்னைச்சோலை பத்திரகாளி அம்மனின் வருடாந்தச் சடங்கு விழா

மட்டக்களப்பின் மாநகரப் பிரதேசத்தில் உள்ள, பல்வேறு வித்தியாசமான, தனித்துவங்கள் கொண்டமைந்த பத்ததிச் சடங்குக் கோவில்களுள், ஒப்பீட்டளவில் அதிகளவான பக்தர்கள் கூடி வழிபடுகின்ற ஓர் ஆலயமாக புன்னைச்சோலை எனும் இயற்கையான எழில்மிகு கிராமத்தில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மன் கோவில் விளங்கி வருகின்றது.

இக்கோவிலின் வருடாந்தச் சடங்கு விழாவில் நிறைவு நாள் வைபவமான தீ மிதிக்கும் சடங்கு மிகவும் பிரசித்தி பெற்றுத் திகழ்கின்றது.

மட்டக்களப்பின் பல்வேறு இடங்களிலும் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் பங்குபற்றுகையில் மிகுந்த பக்தி சிரத்தையுடன் இத் தீ மிதிப்புச் சடங்கு வருடாந்தம் நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் இத் தீ மிதிப்புச் சடங்கு ஏழாந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிழக்கிலங்கையின் பத்ததிச் சடங்குக் கோவில்களும் அவற்றின் வழிபாட்டு முறைமைகளும் சமூக உளநல விருத்திக்கான பல்வேறு பொறிமுறைமைகளுடன் கட்டமைக்கப்பட்டிருப்பதாக சமூக மானுடவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

விசேடமாக பத்ததிச் சடங்குகள் பேரனர்த்தங்களுள் அகப்படும் சமூகங்களை அவ்வனர்த்தங்களின் தாக்கங்களிலிருந்து மெல்ல மெல்ல விடுவித்து இயல்பான வாழ்வியலுக்கு வழிப்படுத்தும் வகையில் இயக்கம் பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் 1990 களின் பின்னர் மட்டக்களப்பில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால் இடப்பெயர்வுகளும்,



அகதி வாழ்வும், குடும்ப அங்கத்தவர்கள் காணாமல் போதலும் அதிகரித்து வந்தன, மட்டக்களப்பின் பல்வேறு பழந்தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்த சமூகங்களைச் சேர்ந்த மனிதர்கள் சிதறிய நிலையில் மட்டு மாநகர பிரதேசத்திற்குள் செறிவடையும் சூழ்நிலைகளும் உருவாகியிருந்தன.

இவ்வாறு தமது இயல்பு வாழ்வு சின்னாபின்னமாகிய நிலையில் வாழ்வதற்காக முயன்ற கணிசமான மக்களின் வாழ்வில் உள நல ஆற்றுப்படுத்தலை வழங்கவல்ல சடங்காக புன்னைச்சோலை பத்திரகாளி அம்மனின் சடங்கும், அக்கோவிலின் மாதாந்த பௌர்ணமி பூசையும் தாக்கஞ் செலுத்தின.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரும் சகோதரிகளும் காணாமலாகியுள்ள தமது உறவுகள் மீண்டும் வர வேண்டும் எனவும், தமது உறவுகளுக்கும் சமூகத்திற்கும் இனிமேலும் தீங்குகள் ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது எனவும், ஆக்கபூர்வமான கருவளத்தை வேண்டியும் நேர்த்திகள் பல வைத்துத் தமது கூட்டு மனவலியை காளியம்மனை நோக்கி ஓலமிட்டு வெளிப்படுத்தி தீயில் நடந்தார்கள். இவ்வாறு அவர்கள் நேர்த்தி வைத்து தீயில் நடந்தமையால் அசாதாரண காலத்திலும் காளியம்மனின் துணையுடன் வாழ்வதற்கான நம்பிக்கையும், மனவலிமையும் வாய்க்கப் பெற்றார்கள், வாழ்ந்தார்கள், வாழ்ந்து வருகின்றார்கள்.

அதிகளவில் பெண்களும், ஆண்களும், சிறுவர்களும் இத் தீ மிதிப்பில் மிகவும் பக்தியுடனும், உணர்ச்சி பூர்வமாகவும் பங்குபற்றுவதைக் காண முடிகின்றது. தீ மிதிக்கும் பக்தர்கள் மட்டுமன்றி அத்தீமிதிப்பை சுற்றி நின்று பார்த்து வழிபடுவோரும் கண்ணீர் மல்க உணர்ச்சி வயப்பட்டு காளியம்மனை நோக்கி ஓலமிட்டுத் தமது மனவலியை வெளிப்படுத்துவதனை அவதானிக்க முடியும்.

எனவே! ஒரு மக்கள் திரளின் கூட்டு மனவலிகளை ஓலமிட்டு வெளிப்படுத்தி அதனால் மன ஆறுதல் பெற்று வாழ்க்கையைத் தொடருவதற்கான பெரும் சடங்கு விழாவாக புன்னைச்சோலை காளியம்மனின் தீ மிதிப்பும் அதனோடிணைந்த சடங்கு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

1990 களின் பின்னரான அசாதாரண காலத்திலிருந்து பல்வேறு உள நெருக்கடிகளுடன் ஓடி வருகின்ற பெருந்திரளான பல்வேறு மனிதர்களுக்கும் ஏற்றத் தாழ்வுகள் எதுவுமின்றி, உளநல ஆற்றுப்படுத்தல்களை வழங்கவல்ல ஓர் ஆன்மீகப் புகலிடமாக புன்னைச்சோலை காளியம்மன் ஆலயமும் அதன் சடங்கு விழாவும் இயக்கம் பெற்று வருகின்றன.

**து.கௌரீஸ்வரன்**

அனர்த்தங்களால் அவதியுறும் மனிதர்கள் அவ்வனர்த்தங்களுள் அகப்பட்டு வாழ்க்கை ஓர் மாயை எனக் கருதி வாழ்வு மீதான நம்பிக்கையினை இழக்காமல், இவ்வுலகத்தில் ஆக்கபூர்வமாக வாழ்வதே நமது கடமை என வாழ்வு மீதான நம்பிக்கையினை வலுப்படுத்தி, அதற்கான கூட்டு வாழ்வியலை இயக்கம் பெறச் செய்யும் கிழக்கிலங்கையின் பத்ததிச் சடங்குகளையும், அவற்றின் பல்வேறு பரிமாணங்களையும் புரிந்து கொள்ள உதவும் ஓர் உதாரணமாய் விளங்கும் புன்னைச்சோலைக் காளியின் வருடாந்தச் சடங்கில் பங்குபற்றுவோம்! அதன் பயன்களைப் பெற்று வாழுவோம்!.

# பாட்டும் நானே ..பாவமும் நானே (பகுதி -1)

## டி .எம்..சௌந்தரராஜன் : சில நினைவுக் குறிப்புகள் (1922-2013 )



பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் மறைந்த தினம் கடந்த வாரம் நினைவுகூரப்பட்டது. ஒருவரின் மரணத்தை அவர் இறந்த நாளிலிருந்து கணிப்பதுதான் வழமை. ஆனால் ஒரு கலைஞனின் மரணம் வேறு விதமாகவும் நிகழ்ந்து விடுவதுண்டு . புகழ் வெளிச்சம் தன்னை விட்டு மெல்ல மெல்ல அகலத் தொடங்கும் அந்தக் கணத்திலிருந்து அவன் தனக்குள் சிறிது சிறிதாக மரிக்கத் தொடங்குகின்றான். அப்படி ஒரு சூழ் நிலையில்தான் டி.எம்.எஸ். அவர்களை நான் சந்தித்தேன்.

மந்தைவெளியில் சலவைத் துணிகள் பெருமளவில் வெயிலுக்குக் காய்ந்து கொண்டிருக்கும் ஒரு பகுதியில் அவருடைய வீடு அமைந்திருக்கிறது என்ற ஒரே தகவலை வைத்துக் கொண்டு, ஒருவாறு அங்கு போய்ச் சேர்ந்தேன். வாசலருகே இரண்டு ஆட்டோ டிரைவர்கள் உட்கார்ந்து புகைத்துக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் சென்று " டிஎம்.எஸ்.. வீடு இதுதானா ?' 'என்று கேட்டேன்.

"ஆமா சார்... கீழ் வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டு மேல் மாடியில் குடியிருக்கிறார்.. அப்பிடியே மேலே ஏறிப் போங்க..."

மேலே சென்ற படிகள் என்னைக் கொண்டு போய் ஒரு மடக்குக் கதவு அருகே சேர்த்தது .

பூட்டியிருந்த அந்த மடக்குக் கதவு வழியாகக் கூடம் தெரிந்தது. ஆனால் யாருடைய நடமாட்டமும் தென்படவில்லை.

"ஐயா ..ஐயா .." என்று இரண்டு தடவைகள் சத்தமிட்டேன்.

வயது முதிர்ந்த, மரியாதைக்குரிய தோற்றம் கொண்ட ஒரு பெண் சற்றுத் தளர்ந்த நடையுடன் கதவருகே வந்தார்..

"யாரு நீங்க...?"

"நான் இலங்கையைச் சேர்ந்தவன்.. டி .எம். எஸ்.அவர்களின் பரம ரசிகன்.. அவரை சந்திக்க வந்திருக்கிறேன்.'' முடியாது என்பதற்கு அடையாளமாக அவர் தலையை ஆட்டினார்.

'அவர் யாரையும் சந்திக்கிறதா இல்லை... பேசுறதை எல்லாம் தவிர்த்துக்கச் சொல்லி டாக்டர் அட்வைஸ் பண்ணியிருக்காங்க......"

அவ்வளவு சுலபமாகப் பின்வாங்க நான் விரும்பவில்லை.

''அம்மா...மிகவும் தொலை தூரத்தில் இருந்து வந்திருக்கிறன்... இன்னொரு முறை வருவேனா என்கிறதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை... முடிந்தால் அவரிட்ட சொல்லிப் பாருங்க..."

சற்று இரக்கம் அவர் முகத்தில் தென்பட்டது. உள்ளே சென்று மறைந்தவர் மறுபடியும். சில நிமிஷங்களில் வந்தார்.

மூச்சிரைத்த வாறு மடக்குக் கதவைத் திறப்பதில் ஈடுபட்ட அவருக்கு நானும் ஒத்தாசை புரிந்தேன். கூடத்திலிருந்த இருக்கையில் அமருமாறு கூறினார்.

கலைஞர். மு.கருணாநிதி அவர்களின் புதல்வர் அழகிரி அளித்த கேடயமும், கண்ணாடியாலான நினைவுப் பேழையும் கூடத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்தன. அது தவிர ஏராளமான புகைப்படங்கள், பரிசுகள்,கேடயங்கள்.... நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தேன். இலையுதிர் கால மரமொன்றின் எஞ்சிய கடைசி இலைகளைப் போல் அவை அப்போது தோன்றின.

கைலியுடன் மேற்பாகத்தை சால்வையால் ஒப்புக்கு மறைத்தபடி சோர்வான நடையுடன், கலங்கலான பார்வையுடன், விபூதி துலங்கிய நெற்றியுடன் உள்ளறை ஒன்றிலிருந்து டி.எம்.எஸ். என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

நான் உடனே எழுந்து கொண்டேன். எந்தப் பிரபலங்களையும் காணும்போது ஏற்படும் வழமையான படபடப்புடன் நான் கை கூப்பி வணக்கம் தெரிவித்தேன். அவர் பதில் வணக்கம் தெரிவித்து, அமருமாறு என்னை சைகை செய்தார்.

"மாத்திரை விழுங்கினேனா... கொஞ்சம் மங்கலான பார்வையுடன், தலைச் சுற்றல் போல் இருந்தது. அதுதான் படுக்கையில் போய் சாய்ந்து விட்டேன்."

அவரைத் தொந்தரவு செய்கிறேனோ என ஒரு குற்றவுணர்வுக்கு அப்போது ஆளானேன்.' ஓர் அரை மணித்தியாலத்தை எனக்கு ஒதுக்கினால் போதுமானது.. முடியாதென்றால் கூட பரவாயில்லை. உங்களை சந்தித்த மகிழ்ச்சியுடன் திரும்பி விடுவேன்" என்றேன்.

அவர் புன்னகைத்தார். என்னைப் பற்றிய விபரங்களை சுருக்கமாகச் சொன்னேன்.

"நான் பாடத் தொடங்கிய காலத்தில் முதல் முதலாக பாராட்டி வந்த ரசிகனுடைய கடிதம் உங்க நாட்டு மட்டக்களப்பிலிருந்துதான்" என்றார். அந்தத் தகவல் எனக்கு ஏற்கனவே தெரியுமென்பதால் மௌனமாகப் புன்னகைத்தேன்.

தொடக்கத்தில் கொஞ்சமாகப் பேசியவர் பின்னர் நிறையப் பேசத் தொடங்கினார்... அரை மணித்தியாலத்துக்குள் முடித்துக் கொள்ளலாம் என ஆரம்பத்தில் கணிப்பிட்ட அந்த சந்திப்பு அரை நாள் பொழுது வரை நீண்டு விட்டது.

உரையாடல் சுவாரஸ்யம் கொண்ட ஒரு கட்டத்தில் "வா ... என் அறைக்குள்ளயே உட்கார்ந்து சாவகாசமாகப் பேசலாம் " எனத் தன்னுடைய அறைக்குள் என்னை அழைத்துச் சென்று விட்டார் .

'புகழின் வெளிச்சத்தில்' வாழ்ந்து பழக்கப்பட்ட ஒரு கலைஞனின் அந்திம காலத்து தனிமையின் இருளையும், துயரத்தையும் அவருடன் கழித்த அன்றையப் பகல் பொழுதில் உணர்ந்தேன்.

"தில்லையம்பல நடராஜா ", 'தாழையாம் பூ முடிச்சு..',ஒரே ஒரு ஊரிலே ..' பாடல்களை எல்லாம் பெட்டி மொடல் பிலிப்ஸ்(வால்வ்) ரேடியோவில் நான் ஆர்வத்துடன் கேட்ட அந்தக் காலத்தை நினைவு கூர்ந்தேன். அப்போது சின்னப் பையனாக அறியாப் பருவத்தில் இருந்த நான் வானொலிப் பெட்டியின் பின்புற துவாரம் வழியாக அவற்றைப் பாடிய டி.எம்.எஸ்ஸை தேடிய கதையையும் கூறினேன். ...எம்.ஜி.ஆர்.,சிவாஜி, எஸ்.எஸ். ஆர் . போன்றோர்கள் திரையில் தோன்றி வெளிப்படுத்திய குணச்சித்திரங்களை திரைக்குப் பின்னால் குரல் வழியாக நடிப்புடன் பாடிய அவருடைய அபூர்வ ஆற்றலைப் பற்றி நான் சொல்லிக் கொண்டே போனேன்.

என் சிறு வயதில் பிரியத்துக்குரிய நடிகர் எம்.ஜி.ஆர். தன் பாடல்களில் அவர் முன் வைத்த கருத்துக்களால் உலகத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் வரப்போகிறது என நான் நூறு வீதம் நம்பியதையும் அவற்றை இருநூறு வீத நம்பிக்கையுடன் டி.எம். எஸ். பாடிய தொனியையும் சிலாகித்துக் கூறினேன்.

அன்னம் இட்ட வீட்டிலே[மந்திரிகுமாரி], எத்தனை காலம்தான்[மலைக்கள்ளன்], சின்னப் பயலே [அரசிளங்குமரி], அச்சம் என்பது மடைமையடா [மன்னாதி மன்னன்], தூங்காதே தம்பி தூங்காதே [நாடோடி மன்னன்], போயும் போயும்[தாய் சொல்லைத் தட்டாதே], படகோட்டி - தரை மேல் பிறக்க வைத்தான், கொடுத்ததெல்லாம் கொடுத்தான், [படகோட்டி], நான் ஆணையிட்டால்[எங்க வீட்டுப் பிள்ளை], உன்னை அறிந்தால் [வேட்டைக்காரன்], அதோ அந்தப் பறவை, ஓடும் மேகங்களே, ஏன் என்ற கேள்வி [ஆயிரத்தில் ஒருவன்] -, ஒளி விளக்கு -தைரியமாகச் சொல் நீ[,

**உமா வரதராஜன்**

ஒளி விளக்கு], ஆண்டவன் உலகத்தின் [தொழிலாளி], நல்ல பேரை வாங்க [நம் நாடு ] இப்படி எவ்வளவு பாடல்கள்!

'உங்களுடைய பாடல்களில் எப்போதும் எனக்கு மிகவும் பிடித்த பாடல் எது தெரியுமா " என்று நான் கேட்டேன்.

"எது?"

"மந்தமாருதம் நிலவும்.. சந்திரன் வானிலே திகழும்..."

அந்தப் பாடலில் தென்படும் லேசான போதையின் கிறக்கத்தை இன்று வரை என்னால் மறக்க முடிவதில்லை. அந்தப் பாடலை டி.எம்.எஸ். ஞாபகப்படுத்திப் பார்க்க முயன்றார். ஆனால் இயலவில்லை.

" எங்கே, அதைக் கொஞ்சம் பாடிக்காட்டப்பா ! "என்றார்..டி. எம்.எஸ்.

அது அவருக்கு சோதனை மிகுந்த நாள் என்பதில் ஐயமில்லை. அந்தப் பாடலை பாடியும்,விக்கியும் நான் அவருடைய நினைவுக்குக் கொண்டு வரப்பெரும்பாடு பட்டேன். நான் பாடியதை விட அதில் வரும் விக்கலை சிறப்பாகச் செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்பாராத அதிர்ச்சியால் சிலருக்கு பழைய ஞாபகம் திரும்புவதை தமிழ் சினிமாக் காட்சிகளில் கண்டவன் நான். அன்று அனுபவத்தில் உணர்ந்தேன். என் 'குரலினிமையை' சகித்துக் கொண்டு அந்தப் பாடலின் சாயலை ஓரளவு அடையாளங் கண்டு கொண்ட டி.எம். எஸ்ஸின் அந்தப் பெருந்தன்மையையும், புன்னகையையும் இந்த ஆயுளுக்கும் மறக்க மாட்டேன்.

"ஓ! இந்தப் பாடலா ? இந்தப் பாடலுக்கு இசையமைத்த மியூசிக் டைரெக்டர் சாமியாகி, லௌகிக வாழ்க்கையைத் துறந்து, இமயமலை போய் விட்டான் என்பது உனக்குத் தெரியுமா?

" டி .ஆர். ராமநாதன்தானே , தெரியும்... நானே ராஜா என்ற படத்தில் இடம்பெற்ற பாடல்.."

மீண்டும் பழைய ஞாபகங்களுக்குள் புதைந்து விட்டார். அவர் ஒரு குழந்தை போல் மாறியிருந்தார்.

அவருடைய முக்கியமான பல பாடல்களை நான் நினைவு படுத்தத் தொடங்கினேன். அவற்றை எல்லாம் ஒரு மூன்றாம் மனிதனைப் போல் அவர் செவி மடுத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு கட்டத்தில் தானாக ஒரு பாடல் வரிகளை முணு முணுக்க ஆரம்பித்தார். 'பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்.. ஊரை வாங்கினால் உலகை வாங்கலாம். [நம் நாடு- 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி ' பாடல்].

இறந்த காலங்கள் பற்றிய பேச்சைத் தவிர்த்து, எதிர் காலம் பற்றிய கனவுகளையே அவர் வெளிப்படுத்த முயன்று கொண்டிருந்தார். நான் அவரை அவ்வப்போது நிகழ் காலத்துக்கு கொணர மிகவும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தேன்..அசாத்தியமான எதிர்கால ஆசைகளுக்கும் ஒளியின் கனவாகிப் போன இறந்தகாலத்துக்கும், தனிமையின் துயரும், இருளும் படிந்த நிகழ்காலத்துக்கும் நடுவே மாறி மாறி அவருடைய ஊஞ்சல் பயணித்துக் கொண்டிருந்தது. சில வேளைகளில் தூக்கக் கலக்கத்தில் பேசுவது போல் அவர் வார்த்தைகள் வெளிவந்தன .

நான் அவரை சந்தித்த போது அவருக்கு எண்பத்தொன்பது வயது.

தான் அடுத்த வருடம் ஒரு சித்தர் நிலையை எட்டி விடுவேன் எனவும், மரணத்தைக் கடந்து விடுவேன் என்றும், தலை சிறந்த பாடகனாக இன்னொரு சுற்று வலம் வருவேன் எனவும் அவர் கூறினார்.

"ஒரு கலைஞனுக்கு மிகப் பெரிய தண்டனை என்ன தெரியுமா? தனிமை... இதோ பார்.. இந்த வீட்டில் என் மனைவியும் நானுந்தான் இப்போது இருக்கிறோம். அவளுக்கும் உடம்பு முடிவதில்லை...ஒரு காலத்தில் நான் எப்படி இருந்தேன் தெரியுமா? என்னுடைய அப்போதைய சம்பாத்தியத்தில் இந்த சென்னையின் அரை வாசிப் பகுதியையே வாங்கியிருக்கலாம் ... ஆனால் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கவே இல்லை. ஜாலியாக வாழ்ந்து விட்டேன்.... இப்போது யாருமில்லை... உன்னைப் போல் எங்கிருந்தோ, எவனோ ஒருவன் ரசிகன் என்று சொல்லிக் கொண்டு வருகின்றான்... அதுதான் நான் தேடிய பெரிய சொத்து...."

''எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டு அரசியலில் சாமானிய மக்கள் மத்தியில் காவிய நாயகனாக உருவெடுக்க உங்கள் பாடல்கள் பக்க பலமாக இருந்திருக்கின்றன. அ.தி .மு .க . தொடங்கிய காலத்தில் அந்தக் கட்சியின் கொள்கை விளக்கப் பாடலான 'ரெட்டை இலை..வெற்றி தந்த இலை ' என்ற எழுச்சிப் பாடலையும் நீங்கள்தான் பாடினீர்கள். அவர் முதலமைச்சரான பின் உங்களுக்கு ஏதும் உதவிகள் செய்திருக்கிறாரா? " என்று கேட்டேன்.

"அப்படியொன்றும் பெரிதாக இல்லை " என்றார்.

''எம்.ஜி. ஆர் . மூலம் ஜெயலலிதா அவர்களிடம்கூட உங்களுக்கு நல்லுறவு இருந்திருக்கும். அவருடைய சிபாரிசின் பேரில்தான் சூரியகாந்தி படத்தில் வரும் 'ஓ! மேரே தில் ரூபாவில் ' அவருடன் டூயட் பாட ஒத்துக் கொண்டீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்." "ஆம்.. அதெல்லாம் ஒரு காலம். என்னைப் பற்றிய விபரணப் படம் ஒன்றை அன்பர்கள் சிலர் தயாரித்திருந்தனர். அந்தத் தொடரை உங்கள் ஜெயா டி .வி . யில் ஒளிபரப்ப முடியுமா என முதலமைச்சர்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 38

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றிக் கூறுக.

ஆவி ஞணநமன யரல வழளமெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே. (நன்.சூத். 107)

இதன் பிரகாரம் மொழிக்கு அதாவது சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பின்வருமாறு அமையும்

| | | |
|---|---|---|
| உயிரெழுத்துக்கள் | - | 12 |
| மெய்டியழுத்துக்கள் | - | 11 |
| குற்றியல் உகரம் | - | 01 |
| | | 24 |

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தனித்தும் உயிரோடு கூடியும் வரும். அவை தனித்து வரும் போது 'அவை தானே நின்று ஈறாயின' என்று கூறப்பட்டுள்ளது

(i) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. (ஆ – பசு, ஈ - கொசு, ஊ - இறைச்சி, ஏ – அம்பு, ஐ – அழகு, ஓ – மதகு நீர், ஔ – 'அவ்' என்னும் வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்ப் பொருளை ஒப்புமையால் காட்டிநிற்கும்.

(ii) அ, இ, உ - (சுட்டெழுத்துக்கள்), எ – (வினா எழுத்து), ஒ – (ஒத்தான் என்னும் சொல்லின் பகுதி)

பல என்னும் சொல்லில் 'அ' என்பதும்
இடி என்னும் சொல்லில் 'இ' என்பதும்
வடு என்னும் சொல்லில் 'உ' என்பதும்
நொ என்னும் சொல்லில் 'ஒ' என்பதும் (நொ – துன்பம்)
மொழிக்கு இறுதியில் வந்துள்ளன.

"குற்றுயிர் அளபின் ஈறாம்...." என்னும் சூத்திரத்தின் பிரகாரம் உயிரளபெடையின் பொருட்டு உயிர்க்குறில்கள் ஐந்தும் இறுதியில் வரும். அதனடிப்படையில் 'எ' மொழிக்கு இறுதியில் வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது.

• இந்த உயிரெழுத்துக்கள் உயிர்மெய் நிலையில் இறுதியில் வரும் என்பதற்கு, "நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே" என்னும் சூத்திரத்தால் காட்டப்பட்டுள்ளது..

2. மொழிக்கு இறுதியில் உயிரெழுத்துக்கள் வரும் விதத்தைக் குறிப்பிடுக.

(i) 'எ' தவிர்ந்த ஏனைய உயிரெழுத்துக்கள், உயிர்மெய் நிலையில் மொழியின் அதாவது சொல்லின் இறுதியில் வருதல்.

(உ- ம்): பல, பலா, வடி, தேனீ, எடு, பூ, மகளே, தை, நொ, கோ, கௌ.

(ii) அளபெடையின் பொருட்டு உயிர்க்குறில்கள், மொழியின் அதாவது சொல்லின் இறுதியில் வருதல்.

(உ- ம்): பலாஅ, தேனீஇ, பூஉ, மகளேஎ, தைஇ, கோஒ, கௌஉ.

3. மொழிக்கு இறுதியில் மெய்யெழுத்துக்கள் வரும் விதத்தைக் குறிப்பிடுக.

ஞணநமன யரல வழள ஆகிய 11 மெய்கள் வருதல்.

(உ- ம்): உரிஞ், கண், வெரிந், வானம், தேன்,
மெய், பார், பால்,
தெவ், தமிழ், கோள்.

4. மொழிக்கு இறுதியில் சாயும் உகரம் வரும் விதத்தைக் குறிப்பிடுக.

(உ- ம்): படகு.

# கற்போம்

**பயிற்சி :**

(1) எகரம் மொழிக்கு இறுதியில் வருவதற்கு ஓர் உதாரணம் தருக.
(2) மொழிக்கு இறுதியியல் வராத மெய்யெழுத்துக்கள் எவை?
(3) மொழிக்கு இறுதியில் வரும் இடையின மெய்களைக் குறிப்பிடுக.
(4) உயிர்மெய் நிலையில் மொழிக்கு இறுதியில் வராத உயிரெழுத்து எது?
(5) உரிஞ், வெரிந் என்பனவற்றின் பொருளை எழுதுக.

## இலங்கையின் சனத்தொகையில்.

1. 32% இணைய பயனர்கள்.
2. 6 மில்லியன் சமூக ஊடக பயனர்கள் செயலில் உள்ளனர்.
3. 27.38 மில்லியன் கைத்தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன.
4. 20% கைத்தொலைபேசி இணைய பயனர்கள்.
5. இணைய பயனர்களில் 96% முகநூல் பாவனையாளர்கள் (2018 பெப்ரவரி)
6. 6 மில்லியனுக்கும் மேற்பட்ட சமூக ஊடக பயனர்கள், 29% சமூக ஊடக செயலில் பயனர்களாக உள்ளனர்.
7. மொபைல்கள் மூலம் சமூக ஊடகங்கள் பயன்படுத்தும் 5.5மில்லியன் மக்களில், 26% தினசரி செயலில் ஈடுபடுகின்றன.
8. 6 மில்லியன் சமூக ஊடக பயனர்களில், 92% கைத்தொலைபேசிகளையே பயன்படுத்துகின்றனர்.
9. முகநூல் பயனர்களில் 68% ஆண்கள்
10 முகநூல் பயனர்களில் 32% பெண்கள்

## கனவிலும் மரம் வெட்டாதீர்!

– யூனா –

மண்ணைவிட்டு மரங் கிளப்பும் மாக்களே
எண்ணலையோ எம்தேசம் அழிகிற தென்று
கண்போன்ற மரங்களைக் கனவிலும் வெட்டாதீர்
எண்ணமுடன் வெட்டினால் எட்டுமரம் வையுங்கள்.

கிளைகள் தன்னைக் கையெனவே நீட்டிநிழல்
களைப் பின்றித் தருகிற மரத்தைவெட்டி
பிழைகள் செய்து செல்வம் ஏற்றுமுங்கள்
உழைப் பெல்லாம் உழைப்போ தம்பி?

மனிதப் பருவம் யாவிலுமே நம்மோடு
இனிதாய்ப் பயணம் செய்து எங்கள்
இருப்பை உணர்த்தி நின்ற மரத்தின்
கருப்பை அறுப்பு கனவிலும் வேண்டாம்.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## பாட்டும் நானே ...

ஜெயலலிதாவை சந்தித்துக் கேட்டேன். ஆனால் ஜெயா டி.வி.க்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அவர் நாசூக்காக சொல்லி ஒதுங்கிக் கொண்டார்.. இசையமைப்பாளர்கள் எம். எஸ்.விஸ்வநாதன் ,இளையராஜா ஆகியோர் பற்றிய பேச்சு வந்த போது முன்னவர் தன் காரியத்தில் மிகவும் கண்ணானவர் என்றும், பின்னவர் இடதுசாரி அரசியல் பக்க பலத்துடன் தன்னை நிலை நாட்டிக் கொண்டவர் என்றும் சொன்னார்.பக்க விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் ஒருவரைப் பற்றி இப்படி வெளிப்படையாக கருத்துக் கூறும் தன்மைதான் டி.எம். எஸ். ஸைப் பலரிடமிருந்தும் தனிமைப் படுத்தியிருக்கக் கூடுமோ என நான் எண்ணிக் கொண்டேன். டி.எம்.எஸ். ஸிடம் விடை பெற்றுத் திரும்பிக் கொண்டிருந்த போது அவர் பாடிய இரண்டு பாடல்களின் வரிகள் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தன. 'உயர்ந்த இடத்தில் இருக்கும் போது

உலகம் உன்னை மதிக்கும் ,உன்
நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்

நிழலுங் கூட மிதிக்கும்.'

.........................................................................

'ஆரவாரப் பேய்களெல்லாம்
ஓடி விட்டதடா
ஆலயமணி ஓசை நெஞ்சில்
கூடி விட்டதடா
தர்மதேவன் கோயிலிலே
ஒளி துலங்குதடா -மனம்
சாந்தி சாந்தி சாந்தி என்று
ஓய்வு கொண்டதடா !

(தொடரும்)

தொடர்ச்சி...

## பொலிஸ்காரரின் சடலத்தை தோண்டி எடுக்கும் பணிகள்

தோண்டப்படும் இடத்திற்கு இன்றைய தினம் தயானந்தன், மதன் என்றழைக்கப்படும் தம்பிமுத்து செல்வராசா, லிங்கன், என்றழைக்கப்படும் சந்திரன் சுப்பிரமணியம் சமூகமளித்திருந்தார்கள்.

தொடர்ச்சி...

## அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 07

ஒருவருக்கொருவர் ஆதரவை வழங்கலாம். குழுவின் உறுப்பினர்கள் ஒரே பாலினராக அல்லது பொருத்தமாயின் ஆண்களும் பெண்களுமாகக் கலந்து அமையலாம். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு முறைகளைக் கையாண்டிருப்பர். ஆண்கள் சிலசமயங்களில் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதில் கடினத்தை எதிர்நோக்குவர். பொதுவாகப் பெண்கள் தமது உணர்வுகளை இலகுவாக வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதனால் குழுவின் செயற்பாட்டுக்கு உதவலாம். குழுவில் உள்ள ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் ஏற்கனவே கடினமான அனுபவங்களிலிருந்து மீண்டவர்களாக இருக்கலாம். இவர்கள் முன்மாதிரியாக இருந்து ஏனையவருக்குத் தலைமைத்துவத்தை வழங்கலாம். ஓரளவு தேறியவர்கள் தமது பகுதியில் புதிய குழுக்களை அமைத்துக்கொள்ளலாம். ஆறு தொடக்கம் பத்து வரையான உறுப்பினர்களே ஒரு குழுவிற்குரிய சிறந்த எண்ணிக்கையாகும்.

முன்னர் குறிப்பிட்டது போல, ஒரேவகையான உளநலப் பிரச்சினைகளுக்கு உட்பட்டு அதிலிருந்து மீண்டவர்களை உள்ளடக்குவதாக குழுவை அமைக்கலாம். மற்றவர்கள் தற்பொழுது உளப்பாதிப்புக்கு உள்ளானவர்களாக இருக்கலாம். குழுவின் முதலாவது சந்திப்பிலேயே நடைமுறை அம்சங்களைப் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டும். குழுவை வழிநடத்துவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சமூகத் தொண்டர்கள் உதவலாம்.ஆனால் குழுவானது அதன் உறுப்பினர்களுக்குரியது. அதன் வெற்றியானது ஒவ்வொரு உறுப்பினரதும் வினைத்திறனுடைய பங்களிப்பில் தங்கியுள்ளது. எல்லோரும் ஒன்று சேர்வதற்கான காரணத்தைப் பற்றி ஆலோசித்துத் தெளிவடைதல் வேண்டும். ஒரு குழுச்செயற்பாட்டின் போது, ஒருவர் மற்றவர்களுடன் தமக்கு நடந்த நிகழ்வுகளையும், தற்போதைய பிரச்சினைகளையும்பற்றிக் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும். ஒரு பிரச்சினையை எங்ஙனம் கையாளலாம் என்பதற்குரிய அனுபவத்தை குழு உறுப்பினர்களிடம் இருந்து பெறலாம். ஓர் உறுப்பினர் தமக்கு ஏற்பட்டதுபோன்ற ஒரேவகையான பிரச்சினையை

எதிர்கொள்ள மற்றவர்களுக்கு உதவலாம். தாம் குணமடைந்து மீண்ட பின்னர் ஒவ்வொரு உறுப்பினரும் தமது ஊரில் அதேபோல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவக் குழுக்களைஅமைக்கலாம். குழு உறுப்பினர்கள் தமது உணர்வுகளைப் பற்றிக் கதைத்து, பகிர்ந்து உணர்வுகளை வெளிப்படுத்த உதவலாம்.

ஒரு குழு உறுப்பினர், இன்னுமொரு உறுப்பினரின் விடயத்தை, அந்தரங்கமாகப் பேணக்கற்றுக்கொள்ளல் வேண்டும். குழுவில் ஒருவருடன் ஒருவர் கதைப்பது அவர்களுக்குள்ளேயே அந்தரங்கமாகப் பேணப்படல் வேண்டும். இதேபோல் பின்னர் வேறு மக்களுடன் வேலை செய்கின்றபோதும் அந்தரங்கத்தைப் பேணுதல் வேண்டும். குழுவில் இருக்கும் மற்றவர்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முதலாம் அல்லது இரண்டாம் கூட்டங்களில் உறுப்பினர்கள் தமது குழு எவ்வாறு ஒன்றிணைக்கப்படல் வேண்டும் என்பது பற்றியும், குழுவின் கூட்டங்களை எப்படி உள்ளூர் வழமைக்கு நன்கு பொருந்தக்கூடியதாக அமைத்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

நெருக்கீடு பற்றியும் பொதுவாக நெருக்கீட்டின் தாக்கங்கள் பற்றியும் கலந்தாலோசிப்பதற்குச் சில கூட்டங்களைச் செலவிடலாம். உறுப்பினர்கள் கொடூர சம்பவங்கள் அல்லது சித்திரவதைக்கு ஆளாகியிருப்பின் பின்வரும் தொகுப்பை கலந்தாலோசனைக்குப் பயன்படுத்தலாம். தொடர்ந்துவரும் சந்திப்புகளில் ஒவ்வொருவரினதுமுடைய கொடூரமான அனுபவங்கள், பிரச்சினைகள் பற்றியும் அது அவர்கள் வாழ்க்கையை எங்ஙனம் பாதித்துள்ளது என்பதனைப்பற்றியும் கலந்துரையாடலாம். குழு உறுப்பினர்கள், கொடூரமான நிகழ்வுகளுடன் பிணைந்துள்ள உணர்வுகளை ஒருவர் மற்றவருடன் பகிர்ந்து கொள்வதற்கும் உதவலாம். பல சந்திப்புகளின் பின்னரும் குழு உறுப்பினர்கள் தமது கதைகளைக் கூறப் போதிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்த விரும்பின், சந்திப்புகளைத் தொடரலாம். விரைவில் அல்லது பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் இறந்தகாலத்தைப் பற்றிக் கதைப்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பெறுவர் என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும். நடந்த கதையைப் பல தடவை கூறுவது வாழ்க்கையின் பயங்கரங்களிலிருந்து விடுபட்டு மீண்டும் எழ உதவும்.

தொடர்ச்சி...

## இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்''...

மாற்ற வேண்டும் என்ற விடாப்பிடியான அவரின் கொள்கையும் போராட்டமும் வெற்றியடைந்து. அத்தெருக்களின் பெயர்கள் மாற்றமடைந்தன.

கொத்துக்குளம் ஸ்ரீமாரியம்மன் ஆலயத்திலும், மட்/வைரவர் கோவிலிலும் உயிர்ப்பலிகளை தடுக்க நடத்திய போராட்டம் அடிதடியில் முடிந்தது. அதுபோல் மாமாங்கக் கோயில் பூசைகளில் சகலசாதி மக்களும் பங்குபெறத்தக்கதாக கதவுகள் திறக்கப்பட வேண்டுமென இராஜதுரையின் தலைமையில் இந்த சுயமரியாதை இயக்கம் பெரிய போராட்டத்தை நடாத்தியது. அதில் அன்றைய இளைஞர்களாயிருந்த வீமாக்குட்டி, துரையப்பா, தாஸ், சடாட்சரம், மகேஸ்வரம் போன்றோர்களும் பங்குபற்றினர். போராட்டம் வெற்றியும் கண்டது. பிற்காலத்தில் இவர் இந்து சமய அமைச்சரானதும். கோயில்களில் இடம்பெறும் உயிர்ப்பலி தடை செய்யப்பட வேண்டுமென இவரால் சட்டம் கொண்டு வரப்பட்டு இலங்கை நாடு முழுவதுமே கோயில்களில் அச்சட்டமூலத்தினால் உயிர்ப்பலியிடுவது தடை செய்யப்பட்டது. 50களில் தன் உள்ளத்தில் உருவான பகுத்தறிவு எண்ணத்தின் கொள்கைகளை 80களில் செயற்படுத்தியவர் இந்த இராஜதுரை.



(தேனகத்துமுதல்வர்.இராஜதுரையும் தென்னகத்து முதல்வர் அண்ணாதுரையும் )

பகுத்தறிவுவாதியான பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் 03.02.1969ல் இயற்கை எய்தியதும் மட்டக்களப்பு பகுத்தறிவு சுயமரியாதை இயக்கம் மட்டக்களப்பு பாட்டாளிபுரத்தில் பிரமாண்டமான இரங்கல் கூட்டமொன்றை ஒழுங்கு செய்தது. அக்கூட்டத்தில் அண்ணாதுரையைப் பற்றி நீண்டதொரு இரங்கல் உரையை இராஜதுரை தந்திருந்தார். அவ்வுரை பின்பு "மனிதருள் மாணிக்கம்" என்ற தலைப்பில் கைநூல் வடிவமாக பகுத்தறிவு இயக்கத்தினால் 10.02.1969ல் பிரசுரிக்கப்பட்டு மக்களைச் சென்றடைந்தது. பேரறிஞர் அண்ணாதுரை அவர்களின் அன்றைய இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட ஒரே ஒரு இலங்கைப் பிரமுகர் மட்டக்களப்பு தேனகத்திலிருந்து சென்ற இந்த இராஜதுரை மட்டுமேயாகும் என்பது இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

தொடர்ச்சி...

## ''சேட்டைக் கழட்டுங்க முதல்!'' அறியாமையின் ஆணவக்குரல் --02

**இயலும்.**

**பெருந்தெய்வக் கோவில்களில் மரபு, வழக்கத்தைக் காரணம் காட்டி, ஆடையைக் கழற்ற நிர்ப்பந்தித்தால், ஓரளவுக்கேனும் அதிலுள்ள நியாயத்தைக் கருதி ஏற்றுக்கொள்ள முடியும். அங்கு ஆண்டான் - அடிமை முறையைக் கைக்கொள்வதில் தவறில்லை. இதை நாட்டார் மரபில் ஏன் இதைத் திணிக்க வேண்டும்? அங்கு அடியவர்களுக்கும் தெய்வத்துக்கும் உள்ள நேரடி உறவை ஏன் கொச்சைப் படுத்தவேண்டும்?**

**(நான் அறிந்த ஒரு சைவஅறிஞர் பெருந் தெய்வக் கோவில்களிலும் ஆண்களுக்குள்ள ஆடைக்கட்டுப்பாட்டை எதிர்க்கிறார். சமயநூல்களிலேயே சொல்லப்பட்ட வற்றைக்கூட, காலத்தைக் கருதித்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் போது, வெறும் நிலவுடைமைச் சமுதாய அடையாளமான மேலாடைக்கட்டுப்பாட்டை, மரபுஎன்ற ஒரே காரணத்துக்காக சைவக்கோவில்களில் தொடர்வது அனாவசியம் என்கிறார் அவர், உண்மை தானே?)**

**''நல்லூரில கழற்றுறாய்தானே? ஊர்க்கோ வில்என்றால்இளக்காரமா?''என்று இன்னும் கொஞ்சப்பேர்வம்புக்கு வருகிறார்கள். அடப்பாவமே, நல்லூர் க்கோவிலும்நம்மூர்க் கோவிலும்ஒன்றா? இலங்கை ஜனாதிபதி கூட அங்குபோக வேண்டு மென்றால் சட்டையைக் கழற்றவேண்டும். அவர்களது மரபுப்பற்றைஅஞ்சி இந்தியப்பிரதமரே அங்கு செல்லாமல்தவிர்த்ததை ஊர்அறியும். அந்த மனோதிட மும்மரபுப் பற்றும் நம்மவர்களுக்கு இருக்கிறதா? திருமணத்துக்கு வருபவர்களையும் சீருடையோடு நுழைபவர்களையும் எப்படி வரவேற்று அனுமதிக்கிறார்கள் என்பதிலேயேநம்மவர் முகத்திரை கிழிந்துவிடுகிறதே. முன்பேசொன்னதுதான். புலியைப்பார்த்துபூனை போட்டுக்கொண்டசூடுஇது.**

**காலத்துக்கு ஒவ்வாதஇத்தகைய அதிமேதா வித்தனங்களைப் புகுத்துபவர்கள்தான் பிரச்சினைக் குரியவர்கள். கண்ணகி கோவில்களின் அழகொழுகும் மடாலய அமைப்பை இடித்து ஆகம விதிப்படி மாற்றி கும்பாபிஷேகம் செய்பவர்களும் இந்தப் பேர்வழிகள் தான். தமிழ்க் காவியங்களையும் வழக்குரையையும் அகற்றி, அங்கெல்லாம் சமஸ்கிருத மந்திரங்களை ஓத அனுமதிப்பவர்களும் இவர்களே தான்.**

**கோவிலில் காணிக்கைகள் மிஞ்சினால், அந்தப் பணத்தில் ஏதாவது கோவில் மண்டபத்தை இடித்துத் திருத்தி வண்ணமடிப்பதற்கு செலவழிப்பதில் இவர்கள் தயங்குவதில்லை. ஆனால், கோவிலைச் சுற்றி வாழும் ஐந்தாறு ஏழைக்குடும்பங்களுக்கு அறக்கட்டளை ஒன்றை நடாத்துங்கள் என்றால் நம்மைப்பார்த்துமுறைப்பார்கள்.**

**கோவிலுக்கு வெளியே வந்து "இளந்தலைமுறையினர் சமயத்தில் ஆர்வம் காட்டுகிறார்களில்லை, கோவிலுக்கு வருகிறார்களில்லை" என்று முதலைக்கண்ணீர் வடிப்பார்கள். ஆனால், காலத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளைத் தூக்கிப்பிடித்து இளைஞர்களை முகஞ்சுழிக்க வைப்பதில் இவர்களே முன்னிலையில் நிற்பார்கள். நம்இன்றையஇளஞ்சந்ததி பெற்று வந்தசாபம் அது.**

**ஒரு மரபை, பண்பாட்டைத் தொடர முயலும் போது அதன் சமகாலப் பொருத்தப்பாட்டை சிந்திப்பது முக்கியம். அதுகாலத்துக்குப்பொருந் தாவிட்டால், எத்தனைமனதுக்குப்பிடித்ததென்றா லும்சரி, தூக்கிஎறிந்துவிட்டுப்போகவேண்டியது தான். ஆடையால் உடலை மறைப்பது என்பது இன்றைய நாகரிகம், இன்றைய பண்பாடு. ஆடையின்றிஅலைந்ததுகாட்டுமிராண்டிகள்கால ம். காலத்தில் முன்னோக்கித் தான் போகமுடியும், போகவும் வேண்டும். மீண்டும் ஆடைக்குறைப்புச் செய்யச் சொல்வது பண்பாட்டில் பின்னே செல்வது. அது இயற்கைக்கும் முரணானது கூட.**

**இந்த வழக்கத்தை அமுல்படுத்தியசிலர், அதற்கு பரவலாககிளம்பிய எதிர்ப்பைக்கண்ட பின், ''இனிஇதுதான் எல்லாக் கோவிலிலும் நடைமுறை. உங்களால் முடிந்ததை செய்துகொள்ளுங்கள்.'' என்று கறுவிக் கொண்டார்களாம். பொய்க்காரணங்களைக்கூறி ஒருகுறித்த சமயத்தவனை அவனது சொந் வழிபாட்டுத்தலத்துக்குள் அனுமதிக்கமறுப்பது, அவனது அடிப்படை உரிமையை மீறும்தண்டனைக்குரிய குற்றம். அந்தக்குற்றத்துக்காக நீதிமன்றில் அவர்களுக் கெதிராகவழக்குத் தொடரமுடியும் என்பதை அவர்கள் நினைவில் கொள்வது நலம்.**

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 110ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa